

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆகஸ்டு 02, 2012 | புரட்சி 11 | முழக்கம் 29 | விலை: ரூ.2.50


## ✦ செயற்குழுவில் பெரும்பான்மை ஆதரவு இருந்தும், கழகப் பெயரை நாமே பயன்படுத்தும் வாய்ப்பு இருந்தும் பெரியார் இயக்கத்தின் மாண்பு காக்க – நாமே பிரிந்து செல்கிறோம்!

## ✦ ஒன்றுபட்ட இயக்கத்தில் செயல்பாடற்று முடங்குவதைவிட பிரிந்து போய் செயல்படுவதே சாலச் சிறந்தது

## புதிய பெயர் சூட்டி இயக்கப் பணிகளை முன்னெடுக்க...

# ஆக. 12 இல் ஈரோட்டில் கூடுவோம், வாரீர்!

***பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை.***

*அன்பார்ந்த தோழர்களுக்கு வணக்கம்.*

*நமது கழகத்துக்குள் தோழர் இராமக்கிருட்டிணன் அணியினருக்கும், நமக்குமிடையே கடந்த பல ஆண்டுகளாகவே நிலவி வரும் கருத்து வேறுபாடுகள் பற்றி 07.07.2012 அன்று சென்னையில் நடந்து முடிந்த தலைமைச் செயற்குழுவில் விரிவாகவே விவாதித்தோம். பெரியார் கொள்கைகளை முன்னெடுப்பதில் கழகத்தில் நாம் சந்திக்க வேண்டியிருந்த முட்டுக்கட்டைகள் - எதிர்ப்புகள் குறித்து விளக்கினோம். ஒன்றுபட்ட இயக்கத்தில் செயல்படாமல் முடங்குவதைவிட, பிரிந்து நின்று செயல்படுவதே சாலச் சிறந்தது என்பதையும் கூறினோம். இதைத் தொடர்ந்து செயற்குழுவில் கருத்தைத் தெரிவித்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் (82க்கு 56 பேர்) பிரிந்து செயல்படுவதே நல்லது என்று கூறிய நிலையிலும்கூட, நாம் ஒற்றுமை வாய்ப்புக்கான கதவுகளை மூடிவிட விரும்பாமல் மீண்டும் திறந்த மனதுடனேயே ஒற்றுமைக்கான முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனாலும், இந்த முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும்போதே தோழர் இராமக்கிருட்டிணனும் அவரது ஆதரவாளர்களும் தங்கள் அணிக்கு ஆதரவு திரட்டுவதிலும், ஒன்றுபடுதல் நிகழ்ந்து விடவே கூடாது என்று தடுத்து நிறுத்துமளவுக்கு தனி நபர்களை இழிவுபடுத்தும் அறிக்கைகளைத் தோழர்களிடம் பரப்புவதிலும் ஈடுபட்டனர்.*

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அழைப்பு!**

*இணைந்து செயல்பட முடியாமல் பிரிந்து போகும் நிலையிலும், ஏனைய கட்சிகளில் - அமைப்புகளில் நடப்பதைப்போல - "இவர் அவரை நீக்கினார், அவர் இவரை நீக்கினார்" என்பது போன்ற இழிநிலைகள் பெரியார் இயக்கத்தில் நாம் வழி நடத்திய காலத்தில் நிகழ்ந்துவிடக் கூடாது என்ற உண்மையான கவலையோடு அவற்றை எல்லாம் தகர்த்துவிடவே விரும்பினோம்.*

*எனவே, பெரும்பான்மை ஆதரவு நமக்கு இருந்தும், கழகத்தின் பெயரை நாம் தொடர்ந்து பயன்படுத்த வாய்ப்பு இருந்தும், நாகரிகமாகப் பிரிந்து விடலாம் என்ற கருதியதால் - பெரியார் திராவிடர் கழகத்தின் பெயரை, எவர் ஒருவரும் பயன்படுத்த வேண்டாம் என்ற கருத்தை தலைமை நிர்வாகக் குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்களான நாம் முன் வைத்துள்ளோம். பெரியார் இயக்கத்தின் மதிப்பு - மாண்பைக் காக்க வேண்டும் என்று விரும்பினால் அவர்களும் இதனை ஏற்றுச் செயல்படுவார்கள் என்று நம்புகிறோம்; செயல்பட வேண்டும்.*

*அதே வேளையில், நாமும் அமைப்புக்கு புதிய பெயர் வைத்துக் கொண்டு, கொள்கைகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தலாம் என்று கருதினோம். தோழர்களிடம் இதைக் கூறினோம். நமது தோழர்களும் இத்தகைய பண்பான அணுகுமுறை தான் நமக்குச் சரியானது என்று ஆதரவு தெரிவித்தனர்.*

*இந்த நிலையில், இது குறித்து நாம் இறுதி முடிவெடுக்கவும், மேலும் நமது தோழர்களுடன் கலந்து பேசவும் எதிர்வரும் 12.08.2012 ஞாயிறன்று ஈரோட்டில் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளோம். இந்த ஏற்பாட்டை ஏற்கக்கூடிய நமது தோழர்கள் அனைவரும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் பங்கேற்று கருத்துக்களைக் கூற உரிமையுடன் அழைக்கிறோம்.*

*பெரியார் வலியுறுத்திய ஜாதி ஒழிப்புக் கொள்கையை, பார்ப்பன - ஜாதி ஆதிக்க சக்திகள் சவால்விட்டு எதிர்க்கின்றன. பெரியார் கொள்கைகளுக்கு எதிரிகள் - திரிபுவாதிகள் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான சூழலில் நாம் பெரியார் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைவிட்டுவிட்டு கோஷ்டி பூசல்களில் - தனி மனித விமர்சனங்களில் ஆட்படுவது பெரியார் கொள்கைக்கு இழைக்கும் துரோகம் ஆகி விடும். அது நிகழக் கூடாது என்பதே நமது கவலை.*

*தன்னை முன்னிலைப்படுத்தாது - சுய விளம்பரங்களைப் புறந்தள்ளி - கொள்கையை மட்டுமே முன்னிறுத்தி - தன்னல மறுப்புடன் கொள்கைப் பணியாற்ற முன் வந்துள்ள நம்மால் பெரியாரியருக்கு மேலும் வலு சேர்க்க முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.*

*ஈரோடு வாருங்கள்! சந்திப்போம்! திட்டமிடுவோம்! செயல்படுவோம்!*

**தலையங்கம்**

# பெரியார் கூறுகிறார்

## நமது முக்கிய கொள்கை

“சாதி ஒழிய வேண்டும் என்பதும் – நாடு பிரிய வேண்டும் என்பதும்தான் நம் கழகத்தின் முக்கிய கொள்கை. மூடநம்பிக்கை ஒழிய வேண்டும் என்பதும் – வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதும், மற்றவைகளும், இதன் உட்பிரிவுதான்.”

– ‘விடுதலை’ 21.8.1957

“திராவிடர் இயக்கத்துக்கு முக்கியக் கொள்கை இந்நாட்டில் பறையன் என்றும், பார்ப்பான் என்றும், உயர்ந்த சாதிக்காரன், தாழ்ந்த சாதிக்காரன் என்றிருப்பதையும், சூத்திரன், பஞ்சமன் என்றிருப்பதையும் அறவே ஒழித்து, எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரே சமுதாய மக்கள் என்னும் கொள்கைகளை நடைமுறையில் செய்வதே ஆகும்.”

– ‘விடுதலை’ 8.7.1947

**கட்சி – இயக்கம்**

“கட்சி எனப்படுவது குறிப்பிட்ட, அதாவது சில உத்தியோகங்களை அல்லது பட்டங் களை மக்களுக்கு வாங்கித் தருவது; ஓரளவு மக்களுக்கு நன்மை பயக்க முயற்சிப்பது. ஆனால், இயக்கம் என்பது அவ்வாறல்ல; மக்களின் நிரந்தர உரிமைக்கும் வாழ்க்கையின் நலனுக்கும் ஏற்ற வகையில் உழைத்து ஆவன செய்வது. இன்னுங் கூற வேண்டு மானால் இயக்கம் என்பது மக்களின் விருப்பு வெறுப்பை பொருட்படுத்தாது, நாட்டின் முற்போக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைப்பதாகும்.”

– ‘விடுதலை 27.5.1947

“சிறு கூட்டமாயிருந்தாலும் உண்மையும் உழைப்பும் இருக்குமேயானால், பெருங் கூட்டத்தையும் மிகுதியான செல்வாக்கையும் கொண்ட அரசியல் கட்சியைக் காட்டிலும் மேலான நிரந்தரமான நன்மைகளைச் செய்ய முடியும்.”

– ‘விடுதலை’ 24.3.1950

**செயில் முத்திரை**

செயில் முத்திரை பெறுவதல்ல திராவிடர் கழகத்தின் திட்டம். உழைப்பு முத்திரை பெறுவதே நாம் விரும்புவது. தனிப்பட்டவர் களின் செல்வாக்குக்குப் பயன்படுவது சிறை முத்திரை; உழைப்பு முத்திரை தனிப்பட்டவர்களுக்குத் துன்பத்தையும் தொல்லையும் தந்தாலும் மக்களுக்குப் பயன் தரவல்லது.”

– ‘விடுதலை’ 10.4.1950

**மேல்பூச்சுகள் பயன்படாது**

“மக்களுக்கு ஏற்படக் கூடிய புண்ணை இரண்டு முறையில் வைத்தியம் செய்வார்கள். ஒன்று புண்ணுக்கு மேல் மருந்து போட்டு ஆற்றுவது; மற்றொன்று கத்தி கொண்டு அறுத்து சிகிச்சை செய்வது. நம் சமுதாயத்துக்கு இருக்கக் கூடிய புண்ணோ மிக மிகக் கொடுமையானது. அழுகிப் போனது. மேல் பூச்சுகள் மூலம் அதனைக் குணப்படுத்த முடியாது. எனவே கத்தி வைத்து ஆற்றும் பணியில் நாங்கள் ஈடுபடுகிறோம்.”

– ‘விடுதலை’ 4.3.1960

“உலகிலேயே அனேகக் காரியங்களுக்குப் பாடுபட ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். ஏராளமான தாவனங்கள் இருக்கின்றன. ஆனால், சமுதாய இழிவு ஒழிக்க, மேம்பாடு அடையச் செய்ய, பாடுபட எங்களைத் தவிர எவருமே முன்வரவில்லை”.

– ‘விடுதலை’ 2.3.1972

# ‘மனுதர்ம’த்தில் மண்டியிட்ட மானமற்ற தமிழ் மன்னர்கள் (2)

*தமிழ் மன்னர்கள் நடத்தியது மனுதர்ம அடிப்படையிலான பார்ப்பன ஆட்சியே என்பதையும் மனுசாஸ்திரம் எரிக்கப்பட வேண்டும் என்றும் மறைந்த பெரியாரிய லாளர் வழக்கறிஞர் கரூர் பூ.அர. குப்புசாமி எழுதிய கட்டுரையை இன்றைய பொருத்தம் கருதி வெளியிடுகிறோம். அவர் 1985 இல் வெளியிட்ட ‘மன்னர்களும் மனுதர்மம்’ நூலில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது. சென்ற இதழ் தொடர்ச்சி.*

கிராமம் ஊழியம் செய்யும் வகுப்பார்கள் யாரும் ஊரை விட்டு போகக் கூடாது. போனால் அவர்கள் மீது நடவடிக்கை உண்டு. சாதி ஆச்சாரங்களை வரையறுத்து இன்ன வகுப்பார் இன்னின்ன சடங்குகள், உடைகள், உரிமைகள் ஆகியவைகளைத் தான் கைக்கொள்ள வேண்டும் என (களப் பிரர் ஆட்சியில்) அரசாணை பிறப்பித்தனர். அந்த ஆணையும் சாத்திர வல்லுனரான பார்ப்பனர்களின் அபிப்பிராயப்படியே வழங்கப்பட்டது. உதாரணமாக அய்ந்து வகைப்பட்ட கம்மாளர்களை அவர்கள் பிரதிலே மாகளைக் காட்டிலும் உயர்ந்தவர் களான அனுலோமரைச் சேர்ந்தவர்கள் என்றும், எனவே அவர்கள் பூணூல் அணிந்து கொள்ளலாம் என்றும் ஆனால் உபநயன மந்திரம் ஓதும் உரிமை இல்லை என்றும் தீர்ப்பு வழங்கியதாகப் பல கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.

ஒரு கல்வெட்டு ஒரு வகுப்பாரின் உரிமை களை அறிவிக்கின்றது. அவர்கள், “நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதி பேரிகை கொட்டிக் கொள்ளலாம்; பாத ரட்சை போட்டுக் கொள்ளலாம்; வீடுகளுக்கு சுண்ணாம்பு பூசிக் கொள்ளலாம்.”

அதேபோல இன்னொரு கல்வெட்டு இடையர்களின் உரிமைகளை வரையறுக் கிறது; அவர்கள் நன்மைகளுக்கு சிவிகை (பல்லக்கு) ஏறலாம்; தீமைக்கு மேல்வளை வுள்ள பாடை கட்டி அதன் மேல் பச்சைப் பட்டு, புலியூர் பட்டு என்பவற்றைக் கட்டிக் கொள்ளலாம்; பேரிகை கொட்டலாம்; இவற்றை செம்பில் அவர்கள் வெட்டிக் கொள்ளலாம். எந்தெந்த வகுப்பார் கோவில் முறைகளை எவ்வெப்படிச் செய்ய வேண்டு மென்பதற்கும் எங்கெங்கு நின்று கும்பிடலாம் என்பதற்கும் வரையறை உண்டு. இதைப் பின்பற்றி இன்று வரை பல தீர்ப்புகள் வழக்கு மன்றங்களிலே அளிக்கப்பட்டு வருகின்றன.

1914 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்பு ஒன்றில் 1912 (எஸ்.ஏ.1554-1912) திருநெல்வேலி மாவட்டம் பனக்குடியில் உள்ள ஸ்ரீ இராமலிங்கசாமி கோவிலில் இலைவாணியர் சாதியாரும், பார்ப் பனர்கள், வெள்ளாளர்கள், முதலியார்கள் முதலியோர்கள் கோவிலின் எந்தெந்த இடம் வரை செல்லலாம் என்ன கிரமத்தில் வணங்க லாம் என்பன பற்றி சாஸ்திர ஆதாரங்களைக் காட்டி தீர்ப்பு வழங்கி உள்ளது. சாதி ஒழுக்கமும், நீதி, அறமும், பிறழாது நீதி தருகுல நான்கும் (நான்கு வர்ணம்) நிலை நிற்ப பலநூறு ஆண்டுகள் பலாத்காரத்தின் துணை கொண்டு நிலைநாட்டிவிட்ட மனுதர்ம வாழ்நெறியே இன்றைய சமூகத்தின் வாழ்க்கை நெறியாக அமைந்துள்ளது.

அய்யாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கன்பூசியசின் சிந்தனைகள் சீனச் சமூகத்தில் இரண்டறக் கலந்து, சீன மக்களின் சமநெறிச் சமூக அமைப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கிறது என்று கண்டவுடன், அந்த நாட்டு அரசும் தலைவர்களும் நாடு முழுதும் கன்பூசியஸ் சிந்தனைகளை எதிர்த்து, அதை ஒழிக்கும் பிரச்சாரங்களையும் செயல்களையும் மேற்கொண்டார்கள். இங்கே நம் சமூகத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கிச் செல்லரிக்க வைத்தது ஒரு சிறு புல்லருவிக் கூட்டம்!

இன்றுவரை நம் சமூகம் முழுமையின் மீதும் இந்தப் புல்லுருவிக் கூட்டம் ஆதிக்கம் செலுத்தக் காரணமாய் இந்த தரும சாத்திரங் களின் தலையாகத் திகழ்வது மனுதரும சாத்திரம்! சீனத்திலே புரட்சியாளர்கள் கன்பூசியஸ் சிந்தனைகளை எதிர்த்ததுபோல் இங்கே இதனை எதிர்த்துத் தீயிட்டுப் பொசுக் கும் பெரும் பணியில் கழகம் ஈடுபட்டுள்ளது!

**(நிறைவு)**

(நூல் வெளியீடு: மகரந்தம், 19 மேற்கு மடவளாகம், கரூர். ஆண்டு 1985)

# ஜீவா வளர்த்த கட்சியில் “தளி இராமச்சந்திரன்களா?”

## *அரங்க குணசேகரன் கேள்வி*

இராயக்கோட்டையில் 15.7.2012 அன்று நடந்த தோழர் பழனி படுகொலை கண்டன கூட்டத்தில் ‘தமிழக புரட்சிக் கழக’ அமைப்பாளர் அரங்க குணசேகரன் ஆற்றிய உரை:

தோழர் பழனியை நான் 15 ஆண்டுகளாக அறிவேன். பெண்ணாகரத்திற்கு வருகின்ற காலத்தில் எல்லாம் தோழர் பழனியோடு அரசியல் உறவுகளைக் கொண்டு தோழமையுடன் பழகியிருக்கிறேன். ‘வர்க்க எதிரிகளை ஒழித்து, தமிழ்நாடு விடுதலையை சாதிக்க வேண்டும்’ என்ற கொள்கைகளை ஏற்று வர்க்கப் போராளியாக வாழ்ந்த பழனி, வர்க்கப் போருக்கு தடையாக நிற்கும் சாதி, மதத்தை தகர்த்தெறிய போராடும் பெரியார் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். அவரை படுகொலை செய்ததன் மூலம், இந்த தளி சட்டமன்றத் தொகுதி, தமிழ்நாட்டில் தான் இருக்கிறதா? இந்தப் பகுதியின் ஆட்சி தமிழக முதல்வரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதா? சி.பி.ஐ. தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் ஆளுகையில் இருக்கிறதா என்பதை தமிழக முதல்வர் ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

1971 இல் 5000 ஏக்கர் நிலம் பெற்றிருந்த தஞ்சை மாவட்டம் கருப்பையா மூப்பனாரின் பண்ணையில் நில மீட்பு இயக்கம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைக்கு ஏழைகளின் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை பறித்து, நிலக் கொள்ளையனாக மாறிப் போயிருக்கிறது என்றால், 1971க்கும் 2012க்கும் இடையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த அளவுக்கு சீரழிந்து, கீழிறங்கிப் போயிருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். தமிழகத்தில் ஒரு லட்சத்து 80000 ஏக்கர் நிலங்களை தி.மு.க., அ.தி.மு.க., பன்னாட்டுக் கம்பெனிகளின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக தாரை வார்த்துள்ளார்கள். அதைத் தடுத்து, நிலத்தைப் பாதுகாக்க வேண்டிய இராமச்சந்திரன் போன்றவர்கள், ரியல் எஸ்டேட் பிசினஸ் மூலம் பல்லாயிரம் ஏக்கர்களை வாங்கி, பன்னாட்டு கம்பெனிகளுக்குத் தொழில் தொடங்க ஏகாதிபத்திய சேவை செய்யும் இராமச்சந்திரன் போன்ற தரகர்களுக்கு கம்யூனிஸ்ட் தோழர்கள் வக்காலத்து வாங்குவது என்ன நியாயம்? கட்டியிருந்த வேட்டியைத் துவைத்துப் போட்டு, அந்த வேட்டியின் ஈரம் உலரும் வரை தலைவர் காமராசருடன் கூட்டத்திற்கு செல்ல முடியாமல் காத்திருந்த ஜீவா வளர்த்த கம்யூனிஸ்ட் கட்சி, இன்று கொலைகாரன் இராமச்சந்திரன் என்ற ரியல் எஸ்டேட் புரோக்கர்களை வளர்த்து விடலாமா?

களப்பால் குப்புவும், சிவராமனும், இரணியனும் வளர்த்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்த இழி நிலையா? தோழர் பழனி சொந்த ஊரிலிருந்து சொந்த மக்களால் விரட்டப்பட்டவர் என்று பேட்டிக் கொடுக்கும் மாணவர் அணிச் செயலாளர் லெனின் அவர்களே! கர்நாடகத்தில் பிறந்த சீனுவாசராவ், ஊட்டியிலிருந்து, பிறகு இந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் தங்கி அரசியல் வேலை செய்யவில்லையா? ஊர் விட்டு ஊர் சென்று குடியேறுவது தேச விரோதமா? சென்னையிலே இன்று அரசியல் நடத்தும் தா. பாண்டியன், நல்லகண்ணு, மகேந்திரன் எல்லாம் சொந்த ஊரிலிருந்து விரட்டப் பட்டு சென்னையில் இருக்கிறார்களா? என்று கேட்டார்.

# காவல்துறை கெடுபிடிகளை தகர்த்து எழுச்சியுடன் நடந்த வெள்ளோடு கூட்டம்




23.7.2012 திங்கட்கிழமை அன்று மாலை 6 மணிக்கு ஈரோடு மாவட்டம் வெள்ளோடு கள்ளுகடை மேடு பகுதியில் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக மனுதர்ம எரிப்புப் போராட்டம் ஏன்? என்பது பற்றிய விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை குடந்தை சிற்பி இராசன் நடத்தினார். இந்த நிகழ்ச்சிக்கு பகுத்தறிவாளர் பேரவை பசிவக்குமார் தலைமை வகித்தார். பெ.சே. மோகன்ராஜ், செல்லப்பன், செல்வராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிற்பி இராசன், சாமியார்களின் மோசடிகளையும், கடவுளர்களின் பிறப்புக் கதைகளையும் கூறி, மக்களின் மூளைக்கு வேலை கொடுத்தார். கூட்டத்தில் அமர்ந்திருந்த பக்தர்களிடம் கேள்விகளைக் கேட்டு, கடவுள் நம்பிக்கையை உடைக்கும் விதமான பதில்களை அவர்களிடமிருந்தே பெற்று, அதற்கு விளக்கம் அளித்தார்.

அடுத்தபடியாக மனுதர்ம எரிப்பு ஏன்? என்பது பற்றிய விளக்கப் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஈரோடு ஒன்றிய அமைப்பாளர் செ.சசிக்குமார் தலைமை வகித்தார். வெள்ளோடு கோபி வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் சென்னிமலை செல்லப்பன், பகுத்தறிவாளர் பேரவை சிவக்குமார், மாவட்டத் தலைவர் நாத்திகசோதி, தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ப. இரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். ப. இரத்தினசாமி தனது உரையில், இந்தக் கூட்டம் நடைபெறுவதைத் தடுக்க, கூட்ட நாளன்று காவல் துறை நடந்த கொண்ட விதத்தையும் விளக்கினார். குறிப்பாக உளவுப் பிரிவு காவலர் ஆறுமுகம் என்பவர் கூட்டம் நடத்தினால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்பது போன்ற மாயத் தோற்றத்தை இவரே உருவாக்கி, கூட்டம் நடக்கவிருந்த மாரியம்மன் கோவில் திடலுக்கு காலையில் மேடை அமைக்க வந்த தொழிலாளர்களை விரட்டி அடித்தார். பிறகு காவல் துணைக் கண்காணிப்பாளரை வரவழைத்து பொய்யான தகவல்களை மிகைப்படுத்திக் கூறி, பொதுக் கூட்ட இடத்தை மாற்ற முயற்சித்தார்.

தோழர் இரத்தினசாமி, டி.எஸ்.பி. யிடம் பேசும் போது, நாங்கள் அனுமதி கேட்டு கடிதம் கொடுத்து ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. கடைசி நேரத்தில் இடத்தை மாற்றச் சொன்னால், மாற்ற முடியாது. நாங்கள் தடையை மீறி நடத்துகிறோம். நீங்கள் எங்களை கைது செய்து கொள்ளுங்கள் என்றவுடன், டி.எஸ்.பி. இறங்கி வந்து இந்த இடம் தவிர, நீங்கள் வேறு இடம் காட்டுங்கள் என்றார். ஆனாலும், அந்த உளவுப் பிரிவு காவலர் விடாப்பிடியாக, ஆள் அரவமற்ற, பொது மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு இடத்தைக் காண்பித்து இங்குதான் எல்லோரும் கூட்டம் நடத்துவார்கள் என்று வாய் கூசாமல் பொய் சொன்னதை டி.எஸ்.பி.யே கண்டித்ததோடு, நமது தோழர்கள் காட்டிய கள்ளுக்கடை மேடு பகுதியில் கூட்டம் நடத்த அனுமதி அளித்தார்.

இவ்வாறாக காவல்துறையினரின் கடுமையான அடக்குமுறைகளைத் தாண்டி, பொதுக் கூட்டம் மிகவும் வெற்றிகரமாக, எதிர்பார்த்ததைவிட அதிகமான மக்கள் திரளுடன் நடைபெற்றது.

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை:*

இங்கு தோழர்கள் பேசும்போது இந்தக் கூட்டம் நடத்த காவல்துறை அனுமதி அளிக்க மறுத்து அலைக்கழித்த விதத்தை கூறினார்கள். இவர்கள் எல்லாம் இந்த வேலைக்கு வருவதற்குக் காரணமே, தந்தை பெரியாரின் இட ஒதுக்கீடு கேட்டு நடத்திய போராட்டமும், அதன் மூலமாக போராடிப் பெற்ற இடஒதுக்கீடு மூலமாகத்தான். இதையெல்லாம் இவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்றால், இவ்வாறு பகுத்தறிவு கருத்துக்களை பரப்ப இடையூறு செய்ய மாட்டார்கள்.

*1936 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு முன்பு அனைத்து* மாகாணங்களிலும் மத்திய அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு இல்லாதபோது, அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் இடஒதுக்கீடு இருந்தது. இதற்குக் காரணம் அன்றைய நீதிக்கட்சியும், பெரியாரும் தான். ஆனால், இவ்வாறு போராடிப் பெற்ற இடஒதுக்கீட்டை, வெள்ளைக்காரன் கொடுத்த இட ஒதுக்கீட்டை சுதந்திரத்திற்குப் பின் நம் நாட்டை ஆண்ட நம்மவர்கள் பறித்துக் கொண்டார்கள். 2006 ஆம் ஆண்டு வரை இந்த இடஒதுக்கீடு இல்லை. மத்திய அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு கேட்டுப் போராடியபோது, அதற்கென அமைக்கப்பட்ட வீரப்ப மொய்லி குழு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் இந்த ஆண்டு 9 சதவீதம் அடுத்த ஆண்டு 9 சதவீதம் என தவணை முறையில் வழங்கலாம் எனப் பரிந்துரை செய்தது. இதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம், வீரப்ப மொய்லி அறிக்கையை எரிக்கும் போராட்டத்தை நடத்தியது. நமது தோழர்கள் 200 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு பிற்படுத்தப்பட்ட மக்களின் மத்திய அரசு பணிகளுக்கான இடஒதுக்கீடு போராட்டத்தில் கழகத்தின் பங்கு மறுக்க முடியாது.

இன்றும் கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது அடக்குமுறையை ஏவி விடும் பிற்படுத்தப்பட்டோர், மத்திய அரசுப் பணிகளில் தங்களுக்கான உரிய இடஒதுக்கீடு கேட்டுப் போராட முயலட்டும். மத்திய அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டோர் சதவீதம் 14.5. ஆனால் பிற்படுத்தப்பட்டோரின் சதவீதம் வெறும் 2.5 தான்.

இன்றைக்கு நம் நாட்டிலே இருக்கிற இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் அரேபியாவில் இருந்தும், ஜெருசலேமில் இருந்தும் வந்தவர்கள் அல்ல. அவர்களும் நம்மவர்கள் தான். இந்து மத அடக்கு முறைகள் தாங்க முடியாமல் தான் அவர்கள் பிற மதங்களுக்குச் சென்று விட்டார்கள். அங்கு சமத்துவமாக வாழ்கிறார்கள். பெரியார் திராவிடர் கழகத்தினர் பிற மதங்களைத் திட்டுவது இல்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால், நாங்கள் எல்லா மதங்களையும் தான் கண்டிக்கிறோம். அங்கெல்லாம் மூட நம்பிக்கைகளும், அந்த மதத்திலேயே உள்ள பிறர் மீதான அடக்குமுறைகளும் குறைவாக உள்ளன. அதனால் குறைவாகக் கண்டிக்கிறோம். ஆனால், இந்து மத அடக்குமுறைகள் அதிகமாக உள்ளதால் அதிகமாக கண்டிக்கிறோம். மக்கள் அனைவரும் சமம், சமத்துவம் என்று சொன்ன இஸ்லாம் கிறிஸ்தவ மதங்களும்கூட, இந்தியாவிற்கு வந்த பிறகு, இங்குள்ள இந்து சாதிக் கட்டமைப்பைப் பார்த்து கெட்டுப்போய் சாதிகளாகப் பிரிகின்றன. ஆனால், அவற்றின் அடிப்படைத் தத்துவத்தில் சாதி இல்லை. ஆனால், இந்து மதம் மட்டுமே சாதிகளை ஊக்குவிப்பதோடு அல்லாமல், நான்கு விதமான சாதிகளை நான் தான் படைத்தேன். நான் நினைத்தாலும் அதை மாற்ற முடியாது என்று இந்து மதக் கடவுளான கிருஷ்ணனே சொல்வதாக இந்து மதம் சொல்கிறது. எனவே தான் தந்தை பெரியார் சொன்னார் நான் இந்துவாக இல்லை என்று.

இன்று புறப்பட்டுள்ள சிலர் சொல்கிறார்கள், அந்தக் காலத்தில் நம் தமிழ் இனம் அப்படி இருந்தது, இப்படி இருந்தது என்று சங்க காலத்தில் பெண் கவிஞர்கள் பாடல் எழுதினார்கள். அனைத்து சாதியிலும், கை தேர்ந்த புலவர்கள் இருந்தார்கள். உதாரணமாக பெருந்தச்சன், சாத்தன், வெண்ணிக் குயத்தி, வேட்டுவப்பெண் இளவெயினி என்று இருந்தார்கள். ஆனால், இடையில் கைபர் போலன் கணவாய்கள் வழியாக வந்த பார்ப்பனர்களால் தான் நம் சமூகத்தில் பிரிவினைகள் தலைதூககி, மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், அடக்கப்பட்டார்கள். அதனால் தான் பெரியவர்கள் பலரும் சொன்னார்கள், பாம்பையும் பார்ப்பானையும் ஒரு சேரக் கண்டால் முதலில் பார்ப்பானை அடி என்று. தந்தை பெரியாரின் போராட்டத்தால் மீண்ட இந்த சூழ்ச்சிக்கார பார்ப்பனர்களை ஏறக்குறைய அரசியலில் இருந்தே விரட்டிவிட்டோம். கல்வியை கைப்பற்றி விட்டோம். ஆனால், சமூக தளங்களில் அடிமைப்பட்டு இருக்கிறோம். இன்றளவும் வட மாநிலங்களில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் நிலவுகிறது. கம்யூனிஸ்டுகள் ஆண்ட மேற்கு வங்காளத்தில் பார்ப்பன எம்.எல்.ஏ.க்கள் அதிகம் உள்ளனர். இன்றளவும் வட மாநிலங்களில், புரட்சியாளர்களான பெருந்தலைவர்கள்கூட, தங்கள் பெயருக்குப் பின்னால் சாதி அடைமொழியுடன் இருக்கின்றனர், பானர்ஜி, முகர்ஜி, சட்டர்ஜி என்று. ஆனால், நம் தமிழகத்தில் சாதிக்காக போராடுகிற, சாதிக்கட்சி நடத்துகிற தலைவர்கள்கூட, தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியை போட முடியாத நிலை உள்ளது. இந்த மாற்றம் பெரியாரால் தான் ஏற்பட்டது.

பெரியார் தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்காக மட்டும் போராடவில்லை. பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்காகவும் தான் போராடினார். கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில்கூட நெசவாளிகளும், தச்சர்களும், ஈழவர்களும் (தென்னை மரம் ஏறுபவர்கள்), சாணார்களும் (பனை மரம் ஏறுபவர்கள்) நடக்கக்கூடாத நிலை இருந்தது. இதை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பெரியார் 1924 இல் இரு முறை கைது செய்யப்பட்டார். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆலய நுழைவு போராட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடன் நாடார்களும் நுழைந்தனர்.

பெரியார் நடத்திய கடைசிப் போராட்டம் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற போராட்டம். இதை ஏற்றுக் கொண்ட அன்றைய தமிழக முதல்வர் கலைஞர், தமிழக சட்டசபையில் 234 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் (ஹண்டே என்ற பார்ப்பனர் உட்பட) தீர்மானம் நிறைவேற்றினார். ஆனால், ஐந்து பார்ப்பனர்கள் பெற்ற தடை ஆணை காரணமாக இன்றளவும் நிறைவேறாமல் உள்ளது.

நம்மவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நாமெல்லாம் உயர் சாதி என்று. ஆனால், பார்ப்பனர்களை பொறுத்தவரை அவர்களைத் தவிர எல்லோருமே சூத்திரர்கள் தான். சுப்ரீம் கோர்ட் கூட சொல்லியிருக்கிறது, விந்திய மலைக்கு தெற்கே பார்ப்பனர்கள், சூத்திரர்கள் என்ற இரண்டே

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தோழர் பழனி படுகொலையில் தேடப்பட்ட எம்.எல்.ஏ. சரண்

கிருட்டிணகிரி மாவட்ட கழக அமைப்பாளர் தோழர் பழனி படுகொலையில் தலைமறைவாக இருந்த தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன், அவரது மாமனார் இலகுமய்யா, மைத்துனர் கேசவமூர்த்தி, சித்தராஜி மற்றும் ஒருவர் உட்பட 5 பேரும் ஜூலை 30 ஆம் தேதி காலை திருவண்ணாமலை முதலாவது நீதிமன்ற நடுவர் முன் சரணடைந்துள்ளனர். கொலை நடந்த ஜூலை 5 ஆம் தேதியிலிருந்து தலைமறைவாக இருந்த இவர்களை காவல்துறையின் தனிப்படைகள் தேடி வந்தன. இந்த கொலையில் 22 பேர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

ஏற்கனவே தனக்கு முன் பிணை கேட்டு தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன், உயர்நீதிமன்றத்தில் மனு செய்திருந்தார். கடந்த 26 ஆம் தேதி இந்த முன் பிணை கேட்கும் மனு, நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் தேடப்படும் குற்றவாளி தளி ராமச்சந்திரன் சார்பில் வாதிட வழக்கறிஞர் சங்கத் தலைவர் மோகன கிருட்டிணன் ஆஜர் ஆனார். உச்சநீதிமன்ற பிரபல வழக்கறிஞர் என்.நடராசன், தேடப்படும் குற்றவாளி சார்பில் நீதிபதி முன் வாதிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் முன்கூட்டியே பிணை வழங்கக் கூடாது என்று வாதிட்டார். கொலையுண்ட தோழர் பழனிச் சார்பில் அவரது மகன் வாஞ்சிநாதன் இந்த வழக்கில் இணைத்துக் கொண்டு, தளி சட்டமன்ற உறுப்பினருக்கு பிணை வழங்கக் கூடாது என்று மனுதாக்கல் செய்திருந்தார். வாஞ்சிநாதன் சார்பில் கழக மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, இளங்கோ வாதிட்டனர். இறுதியில் நீதிபதி முன் பிணை கோரும் மனுவை தள்ளுபடி செய்தார். இந்த வழக்கில் இப்போது சரணடைந்துள்ள 5 பேர் தவிர, ஏற்கனவே 7 பேர் சரணடைந்துள்ளனர். 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உள்ளே – வெளியே



நீயும் நானும்
பக்கத்து பக்கத்து வீடு!
ஒரே பள்ளி!
ஒரே வகுப்பு!

நம்ம ரெண்டு பேரோட
அப்பாவும்
ஒரே தொழிற்சாலையில்!

உன் அக்காவும்
என் அக்காவும்
'சுமங்கலி' திட்டத்தில்
ஒரே ஊரில்!

உன் அம்மாவின்
முன் கொசுவமும்
என் அம்மாவின்
பின் கொசுவமும்
பொங்கல் இலவசம்தான்!

சாமி கும்பிடப் போனா
நம்ம ஊரு கோவிலில
நீங்க மட்டும் உள்ளே!
நாங்க மட்டும்
ஏன் வெளியே!

**– இரா. ச. சிவகுமார்**
**நன்றி: 'செம்மலர்'**

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

சாதிகள் தான் என்று இந்து லா என்று சொல்லப்படுகிற இந்துச் சட்டம் சொல்கிறது. பார்ப்பனர்கள் என்றால் இரு பிறப்புடையவர்கள் என்று (பிறக்கும் போது ஒன்று, பூணூல் போடும்போது ஒன்று) சூத்திரர்கள் என்றால் தாசி புத்ராஸ் (வேசி மக்கள் என்று) இவ்வாறு இந்து சட்டத்திலேயே எழுதி வைத்துள்ளார்கள்.

நீங்கள் மகாத்மா, தேசப்பிதா என்று சொல்லும் காந்திக்கே பார்ப்பனர்களால் என்ன நிலை ஏற்பட்டது என்று 'தமிழ்நாட்டில் காந்தி' என்ற நூலில் காந்தியே கூறுவதாக கூறப்பட்டுள்ளது. 1924 இல் காந்தி தமிழகம் வந்தபோது சீனிவாச அய்யங்கார் வீட்டு திண்ணையில் தங்க வைக்கப்பட்டார். அவரே திரும்பவும் 1926 இல் மீண்டும் தமிழகம் வந்தபோது சீனிவாச அய்யங்கார் வீட்டு சமையல் அறை வரை செல்ல காந்தியின் மனைவி அனுமதிக்கப்பட்டார். இந்த மாற்றத்திற்குக் காரணம் 1925 இல் சுயமரியாதை இயக்கம் தோன்றி, போராடியதின் விளைவுதான்.

இன்றைய அரசியல்வாதிகள் பதவிக்காக கட்சியை விட்டு விலகும் சூழலில், தான் வகித்து வந்த 27 பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு காங்கிரசில் சேர்ந்தார்.

இன்றைய அரசியல்வாதிகள் கட்சிக்காக பிரச்சினை ஏற்படும்போது கட்சியை விட்டே ஓடிவிடும் சூழலில் 1919 இல் ஜாலியன் வாலாபாக்கில், காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை பேசுவதற்காக நடைபெற்ற கூட்டத்தில் நடைபெற்ற படுகொலையால் உள்ளம் நொந்து கட்சிக்குப் பிரச்சனை ஏற்பட்ட காலத்தில் கட்சியில் வந்து இணைந்தவர் பெரியார். இத்தகைய பெரியார்தான், இடஒதுக்கீட்டிற்கு எதிராக காங்கிரஸ் கட்சி செயல்படுவது கண்டும், அங்கிருந்த பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தும் காங்கிரசில் இருந்து விலகினார்.

இவ்வாறாக பார்ப்பனர்களின் சூழ்ச்சியால், அவர்கள் விடாமல் இறுக்கிப் பிடித்திருக்கின்ற மனுதர்மத்தை எரிக்கும் போராட்டம், கழகம் சார்பாக நவம்பர் 26 ஆம் தேதி நடைபெற உள்ளது. அதற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும். இவ்வாறாக தலைவர் கொளத்தூர் மணி பேசினார்.

இறுதியாக வெள்ளோடு மூர்த்தி நன்றி கூறினார். வழக்கமாக பொதுக் கூட்டத்தில் நன்றி உரை என்றவுடன் எழுந்து சென்றுவிடும் பொது மக்கள், இந்தக் கூட்டத்தில் நன்றி உரைக்குப் பின்னரும் கலைந்து செல்லாமல் அமர்ந்திருந்தது அனைவருக்கும் வியப்பை அளித்தது. இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அன்பு நாட்டுக் கோழி வளர்ப்பு மைய நிறுவனர்களான சசிக்குமார், பெ.சே. மோகம்ராஜ், சண்முக சுந்தரம் ஆகியோர் மிக சிறப்பாக செய்திருந்தனர். கூட்டத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே வெள்ளோடு சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று, பொதுக் கூட்டத்தைப் பற்றி பொது மக்களிடம் விளக்கி, தொடர் பிரச்சாரத்தில் பகுத்தறிவாளர் பேரவை ப. சிவக்குமார், சசிக்குமார், குமார், செல்வராசு, செல்லப்பன், வெங்கட், இசைகதிர், அஜித் குமார், அழகன், லோகு ஆகியோர் ஈடுபட்டனர்.

**செய்தி: ப. சிவக்குமார்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## ஆகஸ்டு 5 இல் சுயமரியாதைத் தொண்டர்கள் படத்திறப்பு

கூத்தூரசி குருசாமி - குருவிக் கரம்பை வேலு - சுயமரியாதைப் பேரவை சார்பில் சுயமரியாதை இயக்கத் தொண்டர் நாள் 5.8.2012 அன்று காலை 10 மணியளவில் திருவான்மியூரில் (பி.டி.இராபர்ட் இல்லம், 132 வால்மீகி நகர், இரண்டாம் தளம்) மருத்துவர் சவுந்தரபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது. மூவலூர் இராமாமிர்தம் படத்தை வாலாசா வல்லவனும், பட்டுக்கோட்டை டேவிஸ் படத்தை கவிஞர் சிகாமணியும், சுவரெழுத்து சுப்பையா படத்தை புதுகை இராசேந்திரனும் திறந்து வைத்து பேசுகிறார்கள். ஓவியா சிறப்புரையாற்றுகிறார்.

## 'மனு தர்ம'த்துக்கு புகழாரம் சூட்டுகிறது, 'துக்ளக்' ஏடு

'துக்ளக்' பார்ப்பன ஏடு, 'மனு தர்மம்' மனிதர்களுக்கான வாழ்வியல் சட்டங் களைக் கூறும் நூல் என்றும், வேதத்துக்கு ஒப்பானது என்றும் கூறி, புகழாரம் சூட்டி, இவ்வாரம் (25.7.2012) வெளியிட்டுள்ள 'மனுநீதி' நூல் விமர்சனம் இது.



## பார்ப்பன விரத மோசடிகள்

இந்த சதுர்மாஸ்ய விரத காலத்தில் பார்ப்பன மடத் தலைவர்களை சந்தித்து, அவர்களிடம் தங்கள் பிரச்சினைகளைக் கூறுவதற்கு சீடர்கள் கூட்டம் கூட்டமாக படையெடுப்பது வாடிக்கை. இந்த பார்ப்பன விரதம் பற்றி சிலாகித்து, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் (ஜூலை 18) ஆர். சாமிநாதன் என்ற பார்ப்பனர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். முழுமையாக வேதநெறி வாழ்க்கையில் 'பிராமணனாக' வாழும் இந்தக் காலத்தில் இந்தப் பார்ப்பனர்களிடம் தங்களின் மனக் குமுறல்களை கொட்டினால், அதை வேதப் பார்ப்பன 'குருக்கள்' காதால் கேட்டு தலையாட்டினாலே கூற வந்தவர்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமாம்.

இப்படியெல்லாம் எழுதும் அந்தப் பார்ப்பனர், 'சதுர்மாஸ்ய விரத காலங்களில்' பார்ப்பன குருக்களை சந்திப்பதுகூட வியாபாரமாகிவிட்டது என்றும், செல்வாக்குள்ளவர்கள் முக்கிய புள்ளிகள், தட்டு தட்டாக பொருட்களை வாங்கிக் கொண்டு கியூ வரிசையில் நிற்காமல் தனித் தரிசனம் பெற்று விடுகிறார்கள் என்றும் புலம்புகிறார். சங்கராச்சாரிகளையும் பார்ப்பன குருக்களையும் சந்திக்க வரும் கூட்டத்தினர், தங்களின் பதவி உயர்வு, தொழில் முன்னேற்றம், குடும்பப் பிரச்சினைகளையே கொட்டி தீர்ப்பதாகவும் கட்டுரையாளர் புலம்புகிறார்.


சதுர்மாஸ்ய விரத காலத்தில் சங்கராச்சாரிகள் பழங்களையோ, உலர்ந்த திராட்சைகளையோ, முந்திரி பருப்பையோ, எலுமிச்சை பழங்களையோ சாப்பிடக் கூடாது என்று வேத சாஸ்திரங்கள் கூறுகிறதாம். ஆனால், ஆசி வாங்க வரும் பார்ப்பனர்கள் இந்த பழங்களையே வாங்கிக் கொண்டு வருவதாகவும், கட்டுரையாளர் புலம்புகிறார். 'மனுதர்ம'ப்படி பார்ப்பனருக்கு மட்டுமே உரியது இந்த விரதம். அதை இன்றைக்கும் பெருமையோடு ஆங்கில ஏடுகளில் பார்ப்பனர்கள் எழுதுகிறார்கள். காலத்துக்குப் பொருந்தி வராத இந்த சடங்குகள், சம்பிரதாயங்கள் சீடர்களால் மீறப்பட்டாலும், மனுதர்மத்தைத் தூக்கிப் பிடிக்கவே பார்ப்பனர்கள் விரும்புகிறார்கள்.

இதே சதுர்மாஸ்ய விரத காலத்தில்தான் காஞ்சிமடத்திலிருந்து ஜெயேந்திரன், தண்டத்தை (கைக்குச்சி) போட்டுவிட்டு ரகசியமாக வெளியேறினார் - என்பது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd August 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆகஸ்டு 09, 2012 | புரட்சி 11 | முழக்கம் 30 | விலை: ரூ.2.50


# ஈரோடு அழைக்கிறது!

*பாழ்பட்டு, சீர்க்கெட்டு ஆமைகளாய் ஊமைகளாய்க் கிடந்த தமிழினத்துக்கு 'மானமும் அறிவும்' பெற்றுத் தர சூளுரை மேற்கொண்டு, தன்மானத்தை இனமானத்துக்காக ஈகை செய்த அறிவு ஆசான் நமது தலைவர் பெரியார் பிறந்த ஈரோட்டில், நாம் சந்திக்கிறோம்.*

சுயமரியாதை இயக்க வரலாற்றில் ஈரோட்டுக்கு தனிச் சிறப்புகள் உண்டு.

- 1917 ஆம் ஆண்டில் தனது 38 ஆம் அகவையில் பெரியார் நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது ஈரோட்டில்தான்!
- 1921 இல் காந்தியார் கட்டளையை ஏற்று 144 தடை உத்தரவை மீறி பெரியார் கள்ளுக்கடை மறியலை தலைமையேற்று நடத்தியதும் இதே ஈரோடுதான்! பெரியாரின் துணைவியார் நாகம்மையார், தங்கை கண்ணம்மாளும் மறியலில் கைதானார்கள். மறியல் தீவிரமாகி, 10000 பேர் கைது செய்யப்பட வேண்டிய நிலையில் பதறிப் போன நிர்வாகம், சென்னை மாகாண அரசுக்கு தந்தி வழியாக தகவல் தந்து, அறிவிப்பு கால வரம்புக்கு முன்கூட்டியே 144 தடை உத்தரவை நீக்கிக் கொண்டது. அறிவிக்கப்பட்ட காலம் வரை தடையை நீட்டிக்காமல் முன்கூட்டியே பெரியார் நடத்திய போராட்டத்தின் அழுத்தத்தினால் தடை திரும்பப் பெறப்பட்டது, வரலாற்றில் அதுவே முதல் முறை! இந்த அடக்கு முறைக்கு எதிரான சரித்திரம் நிகழ்ந்ததும் - இதே ஈரோட்டில் தான்!
- வைக்கத்தில் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்று, அருவிகுத்தி காவல் நிலையத்தில் ஒரு மாதமும், மீண்டும் திருவாங்கூர் சிறையில் 24 மணி நேர கை-கால் விலங்குடன் நான்கு மாதமும் சிறையிலிருந்து பெரியார் விடுதலையானார். தாயாரை சந்தித்து, ஒரு வாரம் ஓய்வெடுக்கலாம் என்று வந்தபோது, அதற்கு 7 மாதத்துக்கு முன்பு கதர் பிரச்சாரம் செய்தபோது பேசிய பேச்சுக்காக அரசு வெறுப்பு குற்றம் சாட்டப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டது - இதே ஈரோட்டில் தான்!
- தமிழின வரலாற்றில் மகத்தான சமூகப் புரட்சிக்கு வித்திட்ட பச்சை அட்டை 'குடிஅரசு' வார ஏட்டை 1925 ஆம் ஆண்டு திருப்பா திருப்புலியூர் ஞானியார் அடிகளைக் கொண்டு பெரியார் தொடங்கியதும் இதே ஈரோட்டில் தான்!
- 1928 இல் 'ரிவோல்ட்' ஆங்கில ஏட்டை பெரியார் தொடங்கியதும் இதே ஈரோட்டில் தான்!
- 1933 ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தில் 'சமதர்மப் பிரிவை'த் தொடங்க திட்டமிட்டு, அதற்கான திட்டங்களை தனது இல்லத்தில் கலந்து ஆலோசித்து உருவாக்கி ஈரோடு சமதர்மத் திட்டத்தை பெரியார் வெளியிட்ட பெருமைக்குரிய நகரமும் ஈரோடு தான்! இதன் காரணமாக பெரியார் பொதுவுடைமை பேசுகிறார் என்று சக தோழர்களின் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது. அரசும் அடக்குமுறையை ஏவியது. 1933 இல் 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்று 'குடிஅரசில்' தலையங்கம் எழுதியதற்காக அரச வெறுப்புக் குற்றத்தின் கீழ் பெரியார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- 'சமதாய கொள்கையிலும் அரசியலிலும்' பெரியாருக்கு நேர் எதிர்துருவமாக செயல்பட்டு, அதே நேரத்தில், நண்பராகவும் இருந்த இராஜகோபாலாச்சாரி பார்ப்பனர், காங்கிரசிலிருந்து விலகி, பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்துக் கொண்டு, 1942 இல் பெரியார் இல்லம் வந்து, திராவிட நாடு கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்ததும் இதே ஈரோட்டில் தான்!
- 17.9.1971 பெரியாரின் 93 ஆவது பிறந்த நாள் ! அந்த நாளில் பெரியார் தொண்டுக்கு நன்றி செலுத்த ஈரோடு மக்கள் திரண்டனர். ஈரோடு நகராட்சி மன்றம் பெரியாருக்கு வரவேற்பு தந்தது. அன்றைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெரியார் சிலையை ஈரோட்டில் திறந்தார்.

- வரலாற்ற வரைபடத்தில் ஈரோட்டைப் பதிவு செய்த தலைவர் பெரியார் பிறந்த மண்ணில் -

பெரியார் லட்சியத்தை முன்னெடுக்கத் துடிக்கும் தோழர்களாய் நாம் ஒன்று கூடுகிறோம். இயக்கப் பாதையை தீர்மானிப்பதில் ஒருமித்த கருத்தும், ஒருமித்த உணர்வும் கொண்ட கொள்கைத் தோழர்களாக சங்கமிக்கிறோம்.

பெரியாரியலுக்கு பல்வேறு எதிர் முகாம்கள் 'அவதார'மெடுக்கின்றன. இந்தி எதிர்ப்பிலிருந்து சாதி ஒழிப்பு வரை பெரியாரின் வரலாற்றுப் பங்களிப்பை குறைத்து, சில நேரங்களில் சிறுமைப்படுத்தி இருட்டில் தள்ளி விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள்.

மானத்தையும் உரிமைகளையும் மீட்பதற்கு பெரியார் இயக்கம் நடத்திய மகத்தான போராட்ட வரலாறுகளை மறைத்து புதிய தலைமுறையை குழப்பத்திலாழ்த்தும் சூழ்ச்சிகள் சூழ்ந்து நிற்கின்றன.

பார்ப்பனியமும் - திராவிடர் எதிர்ப்பும் கைகோர்க்கும் மய்யத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை நாமும் அவதானித்தே வருகிறோம்.

சமூக ஒடுக்குமுறைக்கு நச்சு வேர்களாக நிற்கும் பார்ப்பனியமும், மதமும், கடவுளும், மூடநம்பிக்கையும் கைகோர்த்து நிற்கின்றன. இந்த சக்திகளை உரமூட்டுவதற்கு உறுதியாக்குவதற்கு இந்திய தேசியமும், அதனால் வளர்க்கப்படும் தனியார் பன்னாட்டு நிறுவனங்களும் அரண் அமைத்துத் தருகின்றன.

**சமூக விடுதலைக்காக சுயமரியாதைக் கொள்கைகளை தாங்கி நிற்கும் நாம் – கட்சி அதிகார அமைப்பு வாதங்களுக்குள் சிக்கிக் கொண்டு கொள்கைப் பாதைகளில் முட்டுக்கட்டைகளை எதிர் கொள்வதற்கான சூழலும் காலமும் இதுவல்ல.**

**கொள்கைப் பயணத்துக்கு வழியமைத்துத் தரும் நெகிழ்வோடு தொடர்ந்து அணியமாவோம்,**

**தன் முனைப்புகளை ஒதுக்கிவிட்டு சமூகத் தன்மான மீட்புக்கு தயாராவதே உண்மை பெரியாரியல்வாதிக்கான கடமை, பொறுப்பு என்ற உணர்வோடு ஈரோட்டில் கூடுவோம்;**

**வாருங்கள் தோழர்களே!**

## கழகத் தோழர்கள் கவனத்துக்கு...

*12.8.2012 அன்று ஈரோட்டில் கழகத் தோழர்களின் கலந்துரையாடல் சந்திப்பு நடக்கும் இடம்:*

*செல்லாயி அம்மாள் திருமண மண்டபம், (ஈரோடு பேருந்து நிலையம் அருகில்)*

***நேரம் : காலை 10 மணி***

## இளைஞர்களே!

*வாலிபர்கள் தீவிரப் பிரச்சாரம் செய்ய வேண்டும். தற்சமயம் சிலருக்கு ஒவ்வொரு மயிர்க்காலிலும் சமயப்பித்து இருக்கிறது. சாதி மத வேற்றுமைகளை ஒழிக்க வேண்டுவது அத்தியாவசியம். எல்லாவற்றிற்கும் நம்பிக்கையோடு உழைக்க வேண்டும். ஒழுக்கம், அறிவு, ஆசை எல்லோருக்கும் உண்டென்பது உண்மை. இவைகளினால் இந்தியாவிலுள்ள 33 கோடி ஜனங்களுள் 16.5 கோடி பெண்களும் அடிமையாய் இருந்து, சந்தைக்குப் போய் மாடு வாங்குவது போல் நடத்தப்படுவது ஒழிய வேண்டும். அவர்கள் முதலில் தங்கள் வாழ்க்கையை ஊன்றிப் பார்த்துப் பிறகு உலகத்தைப் பார்க்க வேண்டும். சுயமரியாதை இயக்கம் வாலிபர்கள் கையிலிருக்கிறது. பெண்களும் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு சுயமரியாதை உணர்ச்சியை உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.*

**பெரியார், (திராவிடன் – 21.02.1929)**

# மாற்றம், நமக்குள் தேவை

தோழர்களே!

மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும் ஏற்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது. சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். இந்தக் காரியம் ஒரு சமூகப் புரட்சியில் ஏற்பட வேண்டியதேயொழிய சிரிப்பு, விளையாட்டில் ஏற்படக் கூடியதில்லை. இதற்காக அநேக தொல்லைகளை அனுபவிக்க வேண்டி வரும்.

அநேக காரியங்கள் மற்றவர்களால் நாம் துன்பமும் இழிவும் அடையாமல் நம்மாலேயே நாம் இழிவுக்கும், கீழ் நிலைமைக்கும் ஆளாகி வருகின்றோம். நம்மை நாம் திருத்திக் கொள்ளாமல், நமக்குள் ஒரு பெரிய மன மாறுதல் ஏற்படாமல் நமது சமூகம் மாறுதலடைதல் என்பது ஒரு நாளும் முடியாத காரியமாகும்.

சமூகத்தில் மேல் சாதி, கீழ் சாதி, அடிமை சாதி என்பவர்கள் இருப்பதோடு ஆண், பெண் தன்மைகளில் உயர்வும் தாழ்வும் இருந்து வருகின்றது. இவை தவிர ஏழை – பணக்காரன், முதலாளி – தொழிலாளி தன்மைகளும் இருந்து வருகின்றன.

இவற்றுள் சில இயற்கையாக ஏற்பட்டவையாகவும், இவ்வளவுக்குக் காரணம் மனிதன் அல்லவென்றும், சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும் பொருந்திய கடவுளால் ஏற்பட்டவை என்றும் சொல்லப்படுகிறது. இவற்றையே மேல்நிலையில் உள்ளவனும், கீழ் நிலையில் உள்ளவனும் நம்பிக் கொண்டிருக்கிறான். மூடநம்பிக்கைகள்தாம் வெகுகாலமாக மனித சமூகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதற்கில்லாமல் தடுத்துக் கொண்டு வருகின்றன. சாதி வித்தியாசங்களுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் கடவுள்தான் காரணம் என்று எண்ணிய பிறகு யாரால்தான் பரிகாரம் செய்ய முடியும்?

***எந்த மனிதனும் மற்ற சாதியைப் பற்றிச் சந்தேகப்பட்டாலும், தன் சாதியைப் பற்றி நம்பிக்கையாகவும் மேன்மையாகவும் கற்பித்துக் கொண்டு, மற்றவர்களைத் தாழ்த்திப் பெருமையடைகிறான். இந்தக் குணம் பார்ப்பானிடத்தில் மாத்திரமல்ல, எல்லா சாதியாரிடமும் இருந்து வருகின்றது. சாதி பேதம் ஒழிவதை இழிவாய்க் கருதுகிறான்; சாதிக் கலப்பை விபச்சாரித்தனமாக எண்ணுகிறான்! இந்த மனப்பான்மை சாதி ஒழிப்புக்கு எமனாய் இருக்கிறது.***

அஸ்திவாரத்தில் கையை வைத்துச் சாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

திருவள்ளுவர், கபிலர், இராமானுஜர் முதலிய புராணக்காரர்களும், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் முதலிய மத சம்பந்தமான சில புதிய முயற்சிகளும் எல்லாம் உண்மையறியாமலும், உலகமொப்புக்கும் தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களே தவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள சாதி பேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும்படியாகவோ செய்த காரியங்கள் அல்ல. ஆதலால், சாதியை அடியோடு ஒழிக்க எவரும் முயற்சித்ததில்லை. மற்ற பல சாதி மக்களின் முயற்சிகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தாலோ, அவைகளும் தாங்கள் எப்படியாவது மேல் சாதிக்காரர்கள் என்று மதிக்கப்பட வேண்டும் என்கிற முயற்சிகளாகவே இருக்கின்றன.

சாதியில்லாதவர்களும் கலப்பு சாதிக்காரர்களும் தாங்கள் ஒரு கலப்பற்ற சாதியைச் சொல்லிக் கொள்ள முடியாமல் போய்விட்டதே என்று வெட்கப்படுகிறார்களேயொழிய, தங்களைப் பொறுத்த வரை சாதியொழிந்ததே என்று யாரும் திருப்தியடைவதில்லை. இந்தத் தொல்லைகள் அடியோடு ஒழிய வேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தில்தான் இடமிருக்கிறது; சுயமரியாதை இயக்கத்தால்தான் முடியும். மற்றபடி எப்படிப்பட்ட சீர்திருத்தவாதியானாலும் காரியத்திற்கு உதவ மாட்டான்.

**– பெரியார்**

**(பட்டுக்கோட்டை உரை, ‘குடிஅரசு’ 5.4.1936)**

# பார்ப்பன அடிமையாக ஆட்சி செய்த சோழ மன்னர்கள்

*ராஜ ராஜ சோழனின் பெருமை பேசுவோருக்கு பதிலடி தந்து துரை. இளமுருகு எழுதிய நூல் ‘ராஜ ராஜ சோழனின் மறுபக்கம்’. ராஜராஜன் பார்ப்பன மேலாண்மையை உயர்த்திப் பிடித்ததை ஆதாரங்களுடன் விளக்குகிறது. நூலிலிருந்து...*



தமிழ் மன்னர்கள் ஆகிய சோழர்கள் ஆரிய பார்ப்பனர்களுக்குச் சிறப்பிடம் அளித்து அவர்களின் அடிமைகளைப் போல் ஆட்சி செய்து இருக்கின்றனர். இராசராச சோழன் உள்பட அனைத்து மன்னர்களின் கதையும் இதுதான். பார்ப்பன அடிமைத்தனத்தின் உச்சத்தைத் தொட்டவன் இராசராச சோழன். அதைத் தெளிவாகச் சான்றுகளுடன் விளக்கும் பகுதி பார்ப்பனர்களுக்கும் மன்னர்களுக்கும் இடையே ஒரு தவிர்க்க முடியாத உறவு, பிரிக்க முடியாத உறவு இருந்து வந்தது. இது எல்லா நாடுகளிலும் காணப்பட்ட மதம் - அரசு / அரசர்கள் உறவைவிட நெருக்கமானது. பிறப்பின் அடிப்படையில் அமைந்தது.

பார்ப்பனர்களின் நால் வகுப்பு முறை பிறப்பின் அடிப்படையில் தொழில்களை அமைக்கும் விதமாக அமைந்திருந்தது. ஒருவன் எந்த குலத்தில் பிறந்தானோ அந்தக் குலத்திற்கு உரிய தொழிலைத் தான் செய்ய வேண்டும், செய்ய முடியும் என்ற நால்வகைப் பகுப்பு முறை ஒரு இறுக்கமான கட்டமைப்பு ஆகும். மேலும் தலைவிதி, மறுபிறப்புப் போன்ற கருத்துகளையும் பார்ப்பனர்களின் தத்துவம் ஆதரித்து நிற்கிறது. மன்னன், கடவுளின் குறிப்பாகத் திருமாலின் மறு அவதாரம். எனவே, அவனது அரச கட்டளைகள் கடவுள் சொல்லுக்கு இணையானவை, அவற்றை யாரும் எதிர்க்க கூடாது. இது போன்ற கருத்துகளை மக்களிடம் பரப்புவதற்குப் பார்ப்பனர்களின் கருத்தியல் மன்னர்களுக்கு தேவையாய் இருந்தது. மன்னர்கள் மக்களைக் கருவிகளைக் கொண்டும், கொலைக் கருவிகளைக் கொண்டும், அடக்குவதைவிட இத்தகைய கருத்துகளைக் கொண்டு அடக்குவது எளிது என்பதை விரைவில் உணர்ந்து கொண்டனர். அதைப் பார்ப்பனர்கள்தான் திறமையாகச் செய்வார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டார்கள். எனவே மன்னர்கள், பார்ப்பனர்கள் கூட்டுறவு இருவருக்கும் பயன் அளிப்பதாய் விளங்கிற்று. மக்களை ஏமாற்றுவதிலும், அவர்களைச் சுரண்டுவதிலும் இந்த ஒற்றுமை மிகவும் திறமையாக வேலை செய்தது, இத்தகைய கூட்டுறவு இன்று வரை தொடர்ந்து நடைமுறையில் இருப்பதற்கு இதுவே காரணம் ஆகும். சங்ககாலம் தொட்டே இந்த உறவு இருந்து வந்தது. கே.கே. பிள்ளை அவர்கள் தமிழக அந்தணர்கள் நல்லவர்கள், தமிழே அவர்கள் மொழி என்று தமது நூலில் வாதிடுகிறார் (மேலது பக்.315-317). ஆனால் அதற்குத் தக்கச் சான்றுகள் எதையும் அவர் காட்டவில்லை. மாறாக சங்ககாலப் பாடல்கள், மன்னர்களின் பெயர்கள் ஆகியவை அம்மன்னர்களும் பார்ப்பன அடிமைகளே என்ற எண்ணத்தைத் தான் தோற்றுவிக்கிறது. கரிகாற் சோழனைப் பற்றிய சங்கப் புலவன் பாட்டு, வேத வேள்வி செய்த பார்ப்பனருக்கு நிதி, கொடை அளித்து உதவி செய்தான் என்பதை சிறப்பித்துக் கூறுகிறது. பல்யாகசாலைப் பெருவழுதி, ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி போன்ற பெயர்கள் சங்ககால மன்னர்கள் யாகம் செய்தார்கள் அல்லது செய்வித்தார்கள் என்பதைச் சுட்டி நிற்கும். அதன் பின்னர் வந்த களப்பிரர் சமண சமயத்தினர், அவர்கள் காலத்தில் பார்ப்பன ஆதிக்கம் கட்டுக்குள் இருந்ததாகத் தெரிகிறது.

வேள்விக்குடி செப்பேடு இதனைத் தெளிவாகக் கூறுகிறது. அதில் ஒரு பார்ப்பனப் புலவன் பாண்டிய மன்னனைப் பார்த்துக் கூறும் செய்தி, “முன்னர் உன்னுடைய முன்னோர்கள் எங்களுக்கு நிலம் கொடுத்தனர், பின் கலி சூழும் காலம் தோன்றிய போது அந்த நிலம் எம்மிடம் இருந்து பிடுங்கப்பட்டது. (இது களப்பிரர் ஆட்சியைக் குறிக்கும் காலமாக இருக்கலாம்) கலி என்னும் இருள் நீங்கியவுடன் அந்நிலம் எம்மிடம் வந்து சேர்ந்தது”. இதனால் நாம் அறியும் செய்தி பார்ப்பனருக்கு நிலக் கொடை அளிக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தே நிலவி இருக்கிறது என்பதே. களப்பிரர் காலத்திலும் பல்லவர் காலத்தில் மகேந்திரவர்மன் காலம் வரையிலும் பார்ப்பனர் கொட்டம் அடங்கியே இருந்தது. மகேந்திரவர்மன் சைவ மதத்திற்கும் அதன் பின்னர் வந்த பல்லவர்கள் அவரவர் விருப்பப்படி சைவ அல்லது வைணவ மதத்தைத் தழுவிய பிறகு நிலை தலைகீழாக மாறி சமணர்களும் சாக்கியர்களும் விரட்டப்பட்டனர். சிவ - வைணவ மதங்களுக்கு அரசர்கள் ஆதரவு பெருகிற்று. சமணர்கள் வேட்டையாடிக் கொல்லப்பட்டனர். மதுரையில் கழுவேற்றப்பட்டனர். வட ஆற்காடு எண்ணாயிரம் என்ற ஊரில் 8000 சமணர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆழ்வார் ஒருவர் சமணர்களையும் சாக்கியர்களையும் கண்ட இடத்தில் கொல்லுவதே சிறந்த மதத் தொண்டு என்று பாடியுள்ளார். இவ்வாறாகப் பல்லவர் காலத்தில் சிவ, வைணவ மதங்களின், குறிப்பாகப் பார்ப்பனர்களின் ஆதிக்கம் நிலை பெறத் தொடங்கிவிட்டது. பிறகு பிற்கால சோழ, பாண்டியர், விசய நகர, மராட்டியர் என்று காலம் காலமாய் நின்று நிலவ ஆரம்பித்துவிட்டது. இன்றும் அது நீடித்து வருகிறது.

கே.கே.பிள்ளை அவர்கள் தமது நூலில் கூறுவது நமது நெஞ்சை உருக்குவதாய் அமைகிறது. “தமிழகத்து மன்னர்கள் தமிழகத்து அந்தணர்களிடம் என்ன குறை கண்டனர் என்பது விளங்கவில்லை. இம்மன்னர்கள் ஆயிரக்கணக்கில் வட நாட்டு பிராம்மணர்களை இறக்குமதி செய்து கோவில்களிலும் கல்வி நிறுவனங்களிலும் மடங்களிலும் அவர்களைப் பணிக்கு அமர்த்தினர்.

பொன்னையும் பொருளையும் குடியுரிமைகளையும் வாரி வழங்கினர். “பிராமணருக்கு” மட்டும் நிலங்களும் முழு கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அகரம் அக்கிரகாரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் என பல பெயரில் இவை விளங்கின. அரசனுடைய ஆணைகள் அவற்றினுள் செயல்படாது.

எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், ஆயங்கள், கடமைகள் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது. இதைவிடத் தெளிவாக ஒரு வரலாற்று ஆசிரியர் எவ்விதம் பார்ப்பன ஆதிக்கத்தைப் பற்றிக் கூறுவார் என்று எதிர்பார்க்க முடியும்? ஆயினும் சில திருந்தாத உள்ளங்கள் “சோழர்கள் அப்படி இல்லை! பார்ப்பன ஆதிக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருந்தனர்” என்று வரலாற்றைப் புரட்டிப் போட்டு முதுகில் குத்தும் வேலையைச் செய்து வருகின்றனர். இதற்குச் சில தமிழ் ஆய்ந்த முனைவர்களும் முது முனைவர்களும் தாளம் போடுகின்றனர். 1000 கிராமங்களில் 230-ஐத் தான் சோழர்கள் தானமாக அளித்தனர். இது ஒரு பெரிய செய்தியா? பார்ப்பன வரலாற்று ஆய்வாளர்கள் வேண்டும் என்றே கூட்டிச் சொல்லி பார்ப்பனர்களுக்கு சோழர்கள் ஆதரவாகச் செயல்பட்டது போன்ற தோற்றத்தை உருவாக்கி விட்டனர்” என்பது அவர்கள் வாதமாகும். இந்த எண்ணிக்கைகளை அவர்கள் எப்படி பெற்றார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் வாதப்படியே வைத்துக் கொண்டாலும் மக்கள் தொகையில் 2 சதவீதம் உள்ள அயலவர் கூட்டம் 20 சதவீதம் நிலத்தைத் தானமாகப் பெறுவது குற்றமாக அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் போனது ஏன்? சோழர்கள் குறிப்பாக இராசராச சோழனின் நற்பெயரை நிலைநாட்டி அவனைத் தமிழ்க் காவலனாகக் காட்டுவதற்குத்தான்! ஆனால், கல்வெட்டுகள் பொய் சொல்லுவதில்லை. கோவிலில் போடும் சோற்றில்கூட வேதம் பயின்ற சிவனடியார்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) முதல் இடம், மற்றவர்களுக்கு இரண்டாம் இடம் என்று இட ஒதுக்கீடு செய்த கொடுமையைக் கல்வெட்டுகள் சொல்லுகின்றன.

(தொடரும்)

# தளி ராமச்சந்திரன் கும்பலிடம் பறிகொடுத்த நிலங்களை மீட்டெடுப்போம்





## தோழர் பழனி நினைவேந்தல் கூட்டத்தில் கொளத்தூர் மணி மக்களுக்கு அழைப்பு

***தளி ராமச்சந்திரன் மீது நாம் எடுக்கும் பழி தலைக்கு தலை எடுப்பது அல்ல; அந்த கும்பல் பறித்துள்ள நிலங்களை மக்களுக்கு மீட்டுத் தருவதுதான் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.***

கடந்த ஜூலை மாதம் 15 ஆம் தேதி இராயக்கோட்டையில் பழனி நினைவேந்தல் பொதுக் கூட்டம் நடைபெற்றதை பார்த்த பின்பு, தளி பகுதியைச் சார்ந்த சிலர், “இதுவரை எம்.எல்.ஏ.வின் அக்கிரமங்களை யாரும் எதிர்த்து தைரியமாக பேசியதில்லை. இந்தக் கூட்டத்தை பார்த்தவுடன் எங்களுக்கு ஒரு நம்பிக்கை பிறந்துள்ளது. இது போன்ற ஒரு கூட்டத்தை எங்கள் ஊரிலும் நடத்த வேண்டும் என்று கழகத் தோழர்களிடம் கேட்டுக் கொண்டனர்.” பெரியார் திராவிடர் கழகம் சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் ‘தளி’யில் 5.8.2012 ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட கழக அமைப்பாளர் பழனி நினைவேந்தல் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

விவசாயக் கூலித் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த கலைக்குழுவினரின் பாடல்களோடு (தெலுங்கு மொழியில்) துவங்கியது. இங்குள்ள பெரும் பான்மை மக்கள் பேசும் மொழி தெலுங்கு என்பதால், பல்வேறு அமைப்புகளில் இருந்து கலந்து கொண்டு பேசியவர்களில் பலரும் தெலுங்கு மொழியில் பேசினர். தளி சிறிய ஊராக இருந்த போதும், ஏராளமான மக்கள் திரளுடன் கூட்டம் நடைபெற்றது.

மனித உரிமைக்கான மக்கள் இயக்கத்தைச் சார்ந்தவரும், இந்தப் பகுதியில் நடந்த உண்மை அறியும் குழுவில் இடம் பெற்றவருமான வழக்கறிஞர் சி.ஜே. இராஜன், இந்த பகுதி இராமச்சந்திரன் மற்றும் அவருடைய ஆட்களால் அடக்கப்பட்டிருப்பதை விளக்கிப் பேசினார். அதேபோல இங்குள்ள காவல்துறை மக்களுக்கு விரோதமாக நடந்து கொண்டிருப்பதை மக்கள் தெளிவாக விளக்குகிறார்கள் என்று கூறி மக்கள் சொன்ன அதிகாரிகளின் பெயர்களை பட்டியலிட்டார். மாவட்ட காவல் துறை ஆய்வாளரும், மாவட்ட ஆட்சியரும் தங்களை யார் என்று காட்டிக் கொள்ளாமல் சாதாரண மக்களைப் போல் இந்தப் பகுதியில் சென்று மக்களிடம் விசாரித்தால் இன்னும் ஏராளமான செய்திகளை அறிந்து கொள்ளலாம். அவ்வாறு செய்தால் இந்த மக்களுக்கு நீதி கிடைக்கும் என்றும் பேசினார்.

மற்றொரு உண்மை அறியும் குழுவிற்கு தலைமையேற்று சென்றிருந்தவரும், தமிழ்த் தேச விடுதலை இயக்க பொதுச் செயலாளருமான தியாகு இந்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களிடம் சேகரித்த செய்திகளை விளக்கிப் பேசினார். மேலும் கொலையுண்ட பழனி, நிலத் தரகர் வேலை செய்து அதிக அளவில் சொத்துச் சேர்த்திருப்பதாக சி.பி.ஐ. கட்சியினர் கூறுவது முற்றிலும் பொய்யான தகவல் என்று சுட்டிக் காட்டினார். பொதுவுடைமை கட்சியைச் சார்ந்த இராமச்சந்திரன் வீட்டில் வானூர்தி இறங்கும் அளவிற்கு அனைத்து வசதி மிக்க ஏற்பாடு இருப்பதையும், தோழர் பழனியின் வீட்டில் சைக்கிள் நிறுத்தும் அளவிற்குக்கூட நிழல் இல்லாத வசதி குறைவான வீடு என்பதை பாலேபுரத்தில் வந்து பாருங்கள். சென்னையில் இருந்து கொண்டு அவதூறுகளை பரப்பாதீர்கள் என்றும் கேட்டுக் கொண்டார். நீலகிரியைச் சார்ந்த கழகத் தோழர்கள் கிருஷ்ணன், சங்கர் ஆகியோர் தாங்கள் முதன்முதலாக கருப்புச் சட்டை அணிந்தபோது எம்.எல்.ஏ.வின் ஆட்கள் கிழித்து எரித்தது போன்ற பிரச்சினைகள் குறித்தும், நாங்கள் விரும்பும் கட்சிக்குச் செல்லக் கூடாதா? என்றும் கேட்டு தாங்கள் பாதிக்கப்பட்ட விவரங்களைப் பேசினர். தோழர் கிருஷ்ணன், தனது நியாயங்களையும் ஆதங்கங்களையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியபோது, கூடியிருந்த அனைத்து மக்களும் கரவொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர்.

கூட்டத்தை கேட்டுக் கொண்டிருந்த அப்பாஸ் அலி என்பவர், கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்து, கழகத்தின் முயற்சியை பாராட்டி நன்கொடையாக இரண்டாயிரம் ரூபாய்க்குரிய காசோலையை வழங்கி, தனது ஆதரவை வெளிப்படுத்தினார். பழிக்குப் பழி என்பது தலையை வெட்டுவதல்ல. நம்மிடம் ஏமாற்றி பறித்த நிலங்களை மீண்டும் நாம் திரும்பப் பெறுவது தான் உண்மையான பழிக்குப் பழி என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தனது உரையில் குறிப்பிட்டார். அவரது உரையின் சுருக்கம்:

தோழர் பழனியை கொலை செய்த கொலையாளிகள் நிகழ்த்திய கொடூரங்கள் யாருடைய மனதில் இருந்தும் எளிதில் மறைந்து விடாது. அதுவும் ஒரு கொள்கைக்காக நின்றவரை, கொள்கைகளையும் இலட்சியங்களையும் பேசுபவர்களே கொலை செய்திருக்கிறார்கள் என்பது நமக்கு அதிர்ச்சியளிக்கிறது. அதுவும் தோழர் பழனி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினார் என்பதை குற்றமாகக் கருதி, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய இயக்கத்தைச் சார்ந்தவர்களே கொலை செய்திருக்கிறார்கள் என்பதுதான் மிகக் கொடூரமானது. பழனி ஒன்றும் காந்தி அல்ல என்றும், அவர் ஐந்து கோடி ரூபாய் பணம் வைத்திருந்தவர் என்றும், தொலைக்காட்சியில் பேட்டி கொடுக்கும் கொள்கை “குன்று” களைக் கேட்கிறோம்! கோட்சே என்றால் கொலை செய்து விடுவீர்களா? அய்ந்து கோடி பணம் வைத்திருப்பது குற்றமா? அப்படியானால் உங்கள் இராமச் சந்திரனிடம் உள்ள கோடிகளுக்கு எத்தனை முறை வெட்ட வேண்டும்? ஒரு உயர்ந்த கொள்கையை பேசுகிற கட்சியின் பொறுப்பாளர்களே இப்படி பொறுப்பற்று பேசுகிறீர்கள் என்றால் உங்களை பேச வைக்கிற சக்தி எது? ஒரு கொடூரமான கொலையை கண்டிக்க வேண்டியவர்கள், கொலையுண்டவரையே கேவலப்படுத்தி கொலையாளிக்கு துணை நிற்கும் உங்களுடைய மனதில் பொதுவுடைமை சிந்தனைகளை தேக்கி வைத்திருந்தால், இப்படிப்பட்ட கருத்து உங்கள் வாயில் இருந்து வந்திருக்குமா? கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை கூடினால் போதும் என்கிற கேவலமான போக்கு ஒரு முதலாளித்துவ கட்சிகளுக்கு வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், ஒரு எம்.எல்.ஏ. இருந்தால் போதும் என்கிற எண்ணம் உங்களுக்கு இருக்கலாமா?

பணத்தை வைத்தே அனைவரையும் பணிய வைத்துவிட முடியும் என்ற கேவலமான போக்கிற்கு அந்த கட்சியே போய் விட்டதோ என்று நாம் கருத வேண்டியிருக்கிறது. இந்திய பொதுவுடமை கட்சி எங்களுக்கு தோழமை கட்சி என்று நாங்கள் ஒவ்வொரு முறையும் சொன்னோம். அந்தக் கட்சி எங்களோடு இணக்கமாக பணியாற்றுகிற கட்சி. அதில் இருக்கும் ஒரு கயவன் இப்படி செய்து விட்டான் என்றுதான் இதுவரை சொல்லி வந்தோம். ஆனால், இந்த கருத்து தவறானது என்று எங்களுக்கு உணர்த்துவதைப்போல பொதுவுடைமை கட்சி நடந்து கொள்கிறது. அவர்களின் பேச்சு மேலும் நம்மை ஆத்திரப்படுத்துகிற அளவில் இருக்கிறது.

வெங்கடேசன் என்பவர் கொலை செய்யப்பட்ட போதே, அவர் எங்கள் கட்சியை சார்ந்தவரல்ல என்றாலும், ஜனநாயக நாட்டில் இப்படிப்பட்ட நிகழ்வுகளை அனுமதிக்கக் கூடாது என்று கருதி, இது பற்றி விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று விரும்பிய நாங்கள், ஒரு உண்மை அறியும் குழுவை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். பேராசிரியர் மார்க்ஸ், அப்போது வருவதாக ஒப்புக் கொண்டிருந்தார். முதல் தகவல் அறிக்கைகளை நாங்கள் சேகரிக்க தொடங்கினோம். விரிவாக சேகரித்து முடிப்பதற்குள் மார்க்ஸ், மலேசியா செல்ல நேரிட்டது. அவர் வந்த பின்னால் சில தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளால் அது தள்ளிப் போனது. அதற்குள் தோழர் பழனியின் கொலையும் நடந்து விட்டது.


கழகத் தொடர்பு ஏற்பட்டு இந்தப் பகுதிகளுக்கு வரத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளில், ஒரு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மட்டும் வந்து போகிற எனக்கே இங்கு நடக்கிற கொடுமைகள் தெளிவாக தெரிகிறது. ஒரு பத்து ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பகுதியில் கட்சி நடத்துபவர்கள் - ஒரு அய்ந்து ஆண்டுகளுக்கு மேலாக இராமச்சந்திரனோடு தொடர்பு வைத்திருப்பவர்கள் சி.பி.ஐ. கட்சியினர் அவர்களுக்கு இந்த கொடுமைகள் எப்படி தெரியாமல் இருக்கும்?

நீலகிரியில் இராசப்பா என்பவரை விசாரணைக்காக, காவல் துறை அழைத்துச்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தளியில் ஆவேசமாய் திரண்ட மக்கள்





*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

செல்கிறது. அவர் மீது ஏதேனும் வழக்குப் பதியப்பட்டால் நீங்கள் உயிரோடு இருக்க முடியாது என்று நமது தோழர்களை பத்து நாட்களுக்கு முன்பு கூட சி.பி.ஐ. கட்சியைச் சார்ந்தவர்கள் மிரட்டியுள்ளார்கள். இன்று நடைபெறும் கூட்டத்திற்காக ஒட்டப்பட்ட விளம்பர சுவரொட்டிகள் அனைத்தையும் கிழித்திருக்கிறார்கள். இன்னும் இவர்கள் மாறவில்லை என்பதுதான் உண்மை. பழனியின் கொலை வழக்கில் காவல் துறையின் நடவடிக்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது எங்களுக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது. ஆனால், உள்ளூர் காவல் நிலையங்களில் இருப்பவர்கள் இன்னும் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. இந்தப் பகுதியில் நடக்கிற எந்த ஒரு கொலை வழக்கிலும் பணத்திற்காக போலி குற்றவாளிகளே சிறை செல்வார்கள். ஆனால், இப்போது முதன்முறையாக உண்மை கொலையாளிகள் கைதாகியிருப்பது மகிழ்ச்சி தான். தொடர்ந்து புலன் விசாரணை சரியாக நடத்தப்பட்டு இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நமது நோக்கம். இவர்களை தண்டனை பெற வைப்போம் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஆனால், இந்த வழக்கில் இவர்களுக்கு தண்டனை கிடைப்பது மட்டும் போதாது. முடிக்கப்பட்ட பழைய வழக்குகள் மறு விசாரணை செய்யப்பட்டு, சிறையில் இருக்கும் போலி குற்றவாளிகளை விடுதலை செய்து, உண்மையான கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதுவும் போதாது... நீங்கள் உங்கள் நிலங்களை இழந்து ஏமாந்தது போதும், இனியும் ஏமாறாதீர்கள். ஏமாந்தவர்கள் துணிச்சலோடு எழுந்து வாருங்கள் - உங்களின் இழப்புகளை தைரியமாகச் சொல்லுங்கள். நாம் அரசிடம் செல்வோம். நமக்கு அரசாங்கம் காவல்துறை. இவை குறித்து வேறுவிதமான கருத்து உண்டு என்றாலும், நாம் அரசாங்கத்தை வைத்துதான் இயங்க வேண்டியிருக்கிறது. இந்த அரசும், காவல் துறையும் சரியாக இயங்குவது என்பது பொது மக்களாகிய நம்முடைய கையில்தான் இருக்கிறது. இங்கு நடந்திருக்கிற அனைத்து அக்கிரமங்களையும் அம்பலப்படுத்த வேண்டும். அதுதான் மீண்டும் அக்கிரமங்கள் தொடராமல் தடுக்கும் வழி. இங்கு மற்றவர்கள் பேசும்போது ஆரவாரம் செய்து மகிழ்ச்சியை தெரிவிக்கும் நீங்கள் உங்களுக்கு தெரிந்த பிரச்சினைகளை சொல்லாமல் விட்டுவிடாதீர்கள். நீங்கள் தெரிவிப்பதால் ஒருவருக்கு நடந்த கொடுமை, நாளை இன்னொருவருக்கு நடக்காமல் இருக்கும், மற்றொரு நாள் உங்களுக்கும் நடக்காமல் இருக்கும். கடந்த காலங்களில் ஏவல் நாய்களாக இருந்த காவல் துறையினர் இப்போது திருந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக திருந்தும் வரை நாம் விடப் போவதில்லை. காவல் நிலையத்தில் சரியான நடவடிக்கை இல்லை என்றால், காவல் நிலையம் முன்பு திரண்டு போராடுகிற துணிவு ஏற்பட வேண்டும். பழிக்குப் பழி வாங்குவோம் என்ற கருத்து பலரிடம் இருக்கலாம். ஆனால், அது எங்களிடம் இல்லை. பழிக்குப் பழி என்பது இராமச்சந்திரனின் தலையை வெட்டுவதல்ல. நம்மிடம் ஏமாற்றி பறித்த நிலங்களை மீண்டும் நாம் திரும்பப் பெறுவது தான் உண்மையான பழிக்குப் பழி. நம் வேண்டுகோளை ஏற்று மனித உரிமைக்கான மக்கள் இயக்கம் போன்றவர்கள் உதவ முன் வந்துள்ளார்கள். ஓய்வு பெற்ற நீதிபதிகளையும், துணை வேந்தர்களையும் அழைத்து வந்து இந்தப் பகுதியில் விரைவில் பொது விசாரணை நடத்துவதற்கும் தயாராக உள்ளார்கள். அதற்கென ஒரு அலுவலகம் அமைக்கப்படும். அந்த அலுவலகத்தில் நீங்கள் கொடுக்கும் ஆவணங்களை திரட்டி முறையான நடவடிக்கைகள் எடுக்க தயாராக இருக்கிறார்கள். அப்போது நீங்கள் உண்மையை சொல்ல முன் வாருங்கள். நடந்து முடிந்த இந்த கொடுஞ்சாவு, ஆதிக்கத்திற்கான கொடுஞ்சாவாக முடியட்டும். அதுதான் தோழர் பழனிக்கு நாம் செலுத்துகிற உண்மையான அஞ்சலி, உண்மையான இரங்கல், உண்மையான வீர வணக்கம். அனைவரும் ஒன்று திரண்டு வாருங்கள். இந்த ‘தளி’ நாட்டை, சுதந்திர நாடாக மாற்றுவோம் - என்றார் கொளத்தூர் மணி.

இந்த நினைவேந்தல் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆந்திர மாநில விவசாய கூலித் தொழிலாளர் சங்கத் தலைவர் கோட்டையா, தமிழக மக்கள் புரட்சிக் கழகம் அரங்க. குணசேகரன், ஆந்திராவை சார்ந்த கிஷோர் பாபு, பெங்களூர் கலைச் செல்வி, சி.பி.அய். (எம்.எல்) விந்தை வேந்தன், காஞ்சி மக்கள் மன்றம் மேகலா, தளி விவசாயக் கூலித் தொழிலாளர் சங்கம் கிருஷ்ணப்பா, தமிழக மக்கள் விடுதலை முன்னணி தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## டெசோ மாநாடு – கொளத்தூர் மணி அறிக்கை

***தி.மு.க. நடத்தும் டெசோ மாநாட்டுக் குழுவினருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி வேண்டுகோளாக விடுத்துள்ள அறிக்கை:***

டெசோ நடத்தும் மாநாடு குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன. மத்தியில் ஆளுங்கட்சியின் ஒரு அங்கமாக உள்ள தி.மு.க. முன் முயற்சி எடுத்து நடத்தும் இந்த மாநாடு குறித்து – ஈழத்தில் வாழும் தமிழர்களும் – புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் கவலையுடனும், எதிர்பார்ப்புடனும் இந்த மாநாட்டு முடிவு களுக்குக் காத்திருக்கிறார்கள். தமிழ் ஈழ ஆதரவு அமைப்பு நடத்தும் மாநாட்டில்தமிழ் ஈழம் குறித்து தீர்மானங்கள் எதுவும் வராது என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி வெளியிட்ட கருத்து – தமிழர்களுக்கு முதல் அதிர்ச்சியாகிவிட்டது. தமிழ் ஈழம் குறித்த தீர்மானம் வரவில்லை என்றாலும், குறைந்தது கீழ்க்கண்ட முடிவுகளையாவது வலியுறுத்த வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு.


1. ஈழத் தமிழர்கள் – ஒரு தனித் தேசிய இனம்
2. அவர்களுக்குத் தங்கள் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை கோர உரிமை உண்டு.
3. 2009 இறுதிப் போரில் ஈழத்தில் நடந்தது இனப் படுகொலையே.
4. எனவே இனப் படுகொலைகள் நடந்த நாட்டில் அய்.நா.வே முன் முயற்சி எடுத்து வாக்கெடுப்பு நடத்தியதைப் போல் ஈழத் தமிழர்களிடமும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்பு நடத்தும் மாநாட்டில் தமிழீழம் பற்றிய தீர்மானம் இல்லை என்றாலும், வெறுமனே ஒரு பெரிய மாநாடு கூடிக் கலைவதாக அமைந்து விடாமல் ஈழத் தமிழர்களுக்கு ஏதேனும் பயன் சேர்க்க வேண்டுமானால் இந்தக் கோரிக்கைகளையாவது தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th August 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.


புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

# ‘திராவிடர் விடுதலைக் கழகம்’





‘திராவிடர் விடுதலைக் கழகம்’ என்ற பெயருடன் இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்திட கழகத் தோழர்கள் ஈரோட்டில் நடந்த சந்திப்பில் முடிவெடுத்தனர்.

பெரியார் திராவிடர் கழகத்தின் 82 தலைமைச் செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மை யினர் 51 பேர் ஈரோட்டுக்கு வந்த நிலையிலும் ‘நீக்கல் - விலக்கல்’ ஏதுமின்றி நாமாகவே தனி அமைப்பை உருவாக்கிடும் அறிவிப்பை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டார்.

12.08.2012 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு, ஈரோடு செல்லாயம்மாள் திருமண மண்டபத்தில், ‘இலக்கு நோக்கிய இலட்சியப் பாதையில் இணையும் தோழர்கள் சந்திப்பு”, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச் செயலாளர் விடுதலை க. இராசேந்திரன் முன்னிலை யிலும் நடைபெற்றது. நிகழ்ச்சியின் முன்னதாக,



## கழகத்தின் புதிய பெயர்

கழகத் தலைவர் தலைமையில் தோழர்கள் திரளாகச் சென்று, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத்தின் 82 தலைமைச் செயற்குழு உறுப்பினர்களில் 51 உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டனர். நேரில் வர இயலாத குமரி மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் சதா, நெல்லை மாவட்ட அமைப்பாளர் காசிராசன், கடலூர் மாவட்டத் தலைவர் வடலூர் வெங்கடேசன் ஆகியோர் தொலைபேசி வழியாக தங்கள் ஆதரவை கழகத் தலைவரிடம் கூறியிருந்தனர். 1500க்கு மேற்பட்ட தோழர்கள் - பங்கேற்ற இந்த நிகழ்வு உணர்ச்சி மயமாக இருந்தது.

கோவை மாவட்டத்தில் இருந்து மூன்று தனிப் பேருந்துகள் மற்றும் மகிழுந்துகள், தனித்தனியாக தொடர்வண்டி, பேருந்து ஆகியவைகள் மூலமாக சுமார் 350 தோழர்கள் கலந்து கொண்டனர். அதேபோல சென்னையில் இருந்து இரண்டு தனி பேருந்துகள், புதுவையில் இருந்து இரண்டு தனிப் பேருந்துகள் மூலமாகவும் தோழர்கள் வந்திருந்தனர். பல்லடம், திருப்பூர், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை ஆகிய பகுதிகளில் இருந்து தனி சிற்றுந்துகள் மூலமாக வந்திருந்தனர்.

(6 ஆம் பக்கம்)

# இது ஒரு முன்னோக்கிய வளர்ச்சியே!






***கழகத்துக்கு பெயர் சூட்டியதைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகத் தோழர்கள் முன் வைத்த விளக்க அறிக்கை.***

*2001 ஆம் ஆண்டு "பெரியார் காலத் தமிழகத்தை உருவாக்குவோம்" என்ற முழக்கத்தோடு நாம் பயணத்தைத் தொடங்கினோம். தோழர்களின் உழைப்பாலும், தொண்டினாலும் கட்டி எழுப்பிய நம் இயக்கத்தின் செயல்பாடுகள், இயக்கத்திற்கு வெளியே கொள்கை ஆதரவாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. வெற்று மேடைப் பேச்சுக் களன்றி, நாம் மேற்கொண்ட செயல்பாடுகளாலேயே நம் கழகத்தின்மீது அனைவரின் கவனமும் ஈர்க்கப் பட்டது என்பதே உண்மை.*

*பெரியார் நமக்கு விட்டுச் சென்ற சமுதாய இழிவு ஒழிப்பு, ஜாதி - தீண்டாமை ஒழிப்புக்கான செயல்பாடுகளை முன்னெடுக்கும் முயற்சிகளில் கழகத்துக்கு உள்ளேயே நாம் கசப்பான அனுபவங்களை சந்திக்க வேண்டியிருந்ததை இங்கே திரண்டிருக்கும் நாம் அனைவரும் அறிவோம்.*

*பெரியார் நடத்திய சுயமரியாதை இயக்கமானாலும், திராவிடர் கழகமானாலும், அந்த இயக்கங்கள் கொள்கை சார்ந்தவைகளாகவும், கொள்கையை மக்களிடம் கொண்டு போவதற்கே என்ற பார்வையுடனும் அதற்கேற்ற நெகிழ்ச்சித் தன்மையுடனும், இயக்கத்தை தலைவர் பெரியார் கட்டியமைத்தார். சுயமரியாதை இயக்கம் ஓர் அதிசயமான இயக்கம் என்று அவர் எழுதினார்.*

*அமைப்புகள், அதிகாரங்களின் மய்யங் களாக்கப்பட்டு, அதன் வழியாக தனிமனித முனைப்புகள் மேலோங்கும்போது, கொள்கைச் செயல்பாடுகள் பின்னுக்குத் தள்ளப்படும் இடர்ப்பாடுகளைக் கடந்த சில ஆண்டு களாகவே நாம் சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் கொள்கைச் செயல்பாடுகளின் வேகம் குறைந்து, ஒரு கட்டத்தில் தேங்கிப்போய், மேலும் முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டோம்.*

*இந்தத் தடைகளை அகற்ற நாம் மேற்கொண்ட பல முயற்சிகள் பயன் தராத நிலையில் மீண்டும் பெரியார் காலத் தமிழகத்தை உருவாக்கி அவர் விட்டுச் சென்ற கொள்கைகளை மேலும் தெளிவோடும், புரிதலோடும், வேகத்தோடும் கொண்டு செல்ல வேண்டிய கடமையை ஆற்றுவதற்கும், அதில் தங்களை இணைத்துக் கொள்ளுவதற்கும் முன் வந்துள்ள தோழர்களாக நாம் திரண்டிருக்கிறோம். பெரியார் காலத்திலும் பல்வேறு கால கட்டங்களில் இத்தகைய கொள்கை மாறுபாடுகள் - முரண் பாடுகளை பெரியார் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் அவர் மேற்கொண்ட அணுகு முறைகளை நாம் பாடமாகக் கொண்டு கொள்கைக் காகவே அமைப்பாகியிருந்த நாம், அமைப்பின் பெயருக்காகப் போராடிக்கொண்டிருக்க வேண்டாம் என்று முடிவெடுத்தோம். நமது தோழர்களின் கருத்தும் உணர்வும் இதே போன்று இருந்தது நமக்கு மேலும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் தந்தது.*

*இப்போது நாம் உருவாக்கிடும் இந்த 'திராவிடர் விடுதலைக் கழகம்' பெரியார் இலட்சியப் பயணத்தில் மேலும் ஒரு முன்னோக்கிய வளர்ச்சியே தவிர பிளவோ, பின்னடைவோ அல்ல என்ற சரியான புரிதலோடு, மீண்டும் பெரியார் காலத் தமிழகத்தை உருவாக்கி பெரியார் விட்டுச்சென்ற சமுதாய இழிவு ஒழிப்பு, ஜாதி, தீண்டாமை ஒழிப்பு, பெண்விடுதலை, தமிழருக்கான விடுதலை என்ற செயல்திட்டங்கள், கருத்தாக்கங்களோடு பயணத்தைத் தொடர உறுதியேற்போம்.* ✦

# ஈரோட்டுக் காட்சிகள்





## கழக வளர்ச்சிக்கு நிதியளிப்பு!





# கொள்கை உறவுகளின் நெகிழ்ச்சி சந்திப்பு!



***ஈரோட்டில் நடந்த கலந்துரையாடல் சந்திப்பு நிகழ்வுகளிலிருந்து ஒரு தொகுப்பு:***

- விடியற்காலை 5 மணியிலிருந்தே தோழர்கள் வருகைத் தொடங்கவே ஈரோடு செல்லாயம்மாள் திருமண மண்டபம் களை கட்டத் தொடங்கி விட்டது.
- காலை 9 மணி முதல் பேருந்திலும், சிற்றூர் களிலும் வரிசை வரிசையாக வரத் தொடங்கினர். கழகத் தோழர்கள், தோழியர்கள் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினர். காலையில் தனிப் பேருந்துகளில் வந்த தோழர்கள், வழியில் பவானி கூடுதுறை ஆற்று நீரில் நீராடி வந்து சேர்ந்தனர்.
- தன் முனைப்புகளை புறந்தள்ளி, தன்மானக் கிளர்ச்சிக்கு அணியமாகும், தோழர்களே! வாரீர்! வாரீர்! என்று ஈரோடு மாவட்டக் கழகத்தின் சார்பில் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.
- மேடையின் பின்புறத்தில், “இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தில், இணைய வரும் தோழர்களின் சந்திப்பு” என்ற பதாகை, அமைக்கப்பட்டிருந்தது.
- 11 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் - தோழர்களுடன் வாகனங்களில் சென்று பன்னீர்செல்வம் பூங்கா அருகில் உள்ள பெரியார் சிலைக்கு முழக்கங்களுடன் மாலை அணிவித்தனர். (படம் மேலே)
- செல்லாயம்மாள் திருமண மண்டபம், திருமண அரங்கு, அதற்கு அருகே உணவுக் கூடம். வெளியே விருந்தினர் அமரும் இடம். அதற்கு அருகே வாகனங்கள் நிறுத்துமிடம் என்று நான்கு பிரிவுகளாக இருந்தது. இந்த நான்கு பகுதிகளிலும் இருக்கைகள் போடப்பட்டு மண்டபத்துக்கு வெளியே வாயிலில் துணிப் பந்தல் (சாமியானா) போடப்பட்டு, அங்கும் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. வெளியே ஒலி பெருக்கி ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அனைத்து இருக்கைகளும் நிரம்பி வழிந்தது. நிற்க இடமின்றி பலரும் நின்று கொண்டே கேட்டனர்.
- முதல் அமர்வு பகல் 12 மணி தொடங்கி, 2.30 மணிக்கு முடிவடைந்தது. தோழர்கள் அனைவருக்கும் ஈரோடு மாவட்டக் கழகம் சிறப்பான உணவு ஏற்பாடு செய்திருந்தது. நீண்ட வரிசையில் நின்று தோழர்களும் தோழியர்களும் உணவைப் பெற்றுச் சென்றனர். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நிகழ்ந்த உணவு வழங்கும் நிகழ்வில் தோழர்கள் அமைதியாக வரிசையில் காத்திருந்தனர்.
- குறிப்பிடத்தக்க அளவில் பெண்கள் பங்கேற்றனர். மாநில நிர்வாகிகள் பட்டியலிலும் பெண்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- சுயமரியாதை கொள்கையில் ஊறி நிற்கும் மதுரை மருத்துவர் சவுந்தரபாண்டியன் பங்கேற்று, கழகத் தலைவர், பொதுச் செயலாளருக்கு பெரியார் குத்தூசி குருசாமி இணைந்துள்ள படங்களை பரிசாக வழங்கினார். தோல் மருத்துவரான அவர், தோல் தொடர்பான நோய்களுக்கு ஆலோசனையும், சிகிச்சையும் தருவதற்கு தயாராக வந்திருந்தார். தேவைப்பட்ட தோழர்கள் ஆலோசனை, மருந்துகளைப் பெற்றுச் சென்றனர்.
- பிற்பகல் 3.30 மணியளவில் தொடங்கிய அமர்வில், மாவட்டக் கழகங்களின் சார்பாக தோழர்கள் அனைவரும் ‘ரத்தினச் சுருக்கமாகப்’ பேசினர். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெயரை மக்களிடையே கொண்டு அறிமுகப்படுத்துவதற்கும் அடுத்தக் கட்ட இயக்க செயல்பாடுகள் குறித்தும் கருத்துகளைத் தெரிவித்தனர்.
- சசிக்குமார், மோகன்ராஜ், சண்முகசுந்தரம் ஆகியோரது நிறுவனத்தின் சார்பாகவும், விசு, அர்ச்சுனன் ஆகியோரது நிறுவனத்தின் சார்பாகவும் உணவிற்கு தேவையான பொருளுதவிகளைச் செய்தனர். ஜெயராமன், நிவாசு, தட்சிணாமூர்த்தி ஆகியோர் ஒலி பெருக்கி அமைத்துக் கொடுத்தனர்.
- ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.
- நிகழ்வின் தொடக்கத்தில் சிறுமி மதுமிதா பெரியாரின் பெண்ணுரிமை கடவுள், மத மறுப்பு கருத்துகளை வலியுறுத்தி நிகழ்த்திய உரை அனைவரையும் கவர்ந்தது.
- பெரியார் காலத்தில் அவரது ‘பாதுகாப்பு அரணாக’ நின்று ‘தனி மனித ராணுவமாக’ செயல்பட்ட 75 வயது அகவை நிறைந்த ஆசிட் தியாகராசன் உணர்ச்சியோடு பேசினார். கருஞ்சட்டை அணிந்து அடையாளம் காட்டிக் வழமையாகக் கொள்ளாமல் இருக்கும் ஆசிட் தியாகராசன், இந்த நிகழ்வில் பங்கேற்க, புதிதாக கருஞ்சட்டை வாங்கி அணிந்து வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.
- மூத்த பெரியார் பெருந்தொண்டர் ஈரோடு மாரப்பனார் தனது மகன் உடன் கலந்து கொண்டார். மேலும் ஈரோடு விடுதலை வாசகர் வட்டத் தலைவர் அறிவுக்கன்பன் என்கின்ற குப்புசாமி, சென்னை வழக்கறிஞர் வீ. இளங்கோவன், மாவட்ட பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் உட்பட பல முன்னணி தோழர்கள் என திரளாக திரண்டிருந்தனர்.
- சேலம் மேற்கு மாவட்டம் சார்பாக, காவலாண்டியூர் விஜயகுமார், சேலம் கேம்ப் அருள்செல்வம், மேட்டூர் (ஆர்.எஸ்.) அரவிந்த், டைகர் பாலன் ஆகியோர் இணைந்து கழகத் தலைவருக்கு அறுபதாயிரம் ரூபாய் மதிப்பிலான மடி கணினியை வழங்கினர்.
- முதல் நாளே வந்திருந்த தோழர்களுக்கு இரவு உணவு, அடுத்த நாள் காலை உணவு, முற்பகலில் தேநீர் ஆகியவைகளை தயாரிக்கும் பொறுப்புகளை தோழர்கள் பிரேமா, சுகுணா, பேபி மோகன் ஆகியோர் ஏற்றுக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றினர். மதிய உணவு சென்னை தோழர் மோகன் மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- ‘தனித்து செயல்படுவதே சிறந்தது’ என்ற நிலைப்பாட்டை கடந்த ஜூலை 7 ஆம் தேதி சென்னையில் நடந்த ‘பெரியார் திராவிடர் கழக’ மாநில செயற்குழுவில் வலியுறுத்திய தோழர்களுக்கு மட்டுமே இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. இதில் உடன்பாடுள்ள தோழர்கள் அனைவரும் பங்கேற்கலாம் என்று ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. எந்தப் பொறுப்பாளர்களையோ தோழர்களையோ தனிப்பட்ட முறையில் கழகத் தலைவரோ, பொதுச் செயலாளரோ, தோழர்களோ, நிகழ்வுக்கு வருகை தர அழைக்கவில்லை. தோழர்களின் முடிவுக்கே விடப் பட்டது. தாமாகவே தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர்.
- 10 ஆண்டுகாலமாக அமைப்புக்குள்ளே சரியான புரிதலிலும், இலக்கு நேக்கிய இலட்சியப் பயணத்திலும் முனைப்பாக இணைந்து நின்ற தோழர்கள், ஒரே இடத்தில் கூடி ஒருமித்த உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டது, இந்த சந்திப்பின் தனிச் சிறப்பாகும். சந்திப்பை கொள்கைக்கான அமைப்பாக்கிக் கொண்டு, தாங்கள் விரும்பும் இலட்சிய அடையாளம் நிறைந்த பெயர் கிடைத்த பூரிப்புடன் செயல்களம் நோக்கி, விடைபெற்றுச் சென்றனர் தோழர்கள்.

**– நமது செய்தியாளர்**

## நிகழ்ச்சிக்கு உழைத்த தோழர்கள்

இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாட்டுப் பணிகளை, ஈரோடு இரத்தினசாமி தலைமையில், மாவட்ட தலைவர் நாத்திகஜோதி, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியரோடு இணைந்து தோழர்கள் சிவக்குமார், சிவா, சுப்ரமணி, குமார், வெங்கட், மோகன், திருமுருகன், பூபதிராஜ், இரமேஷ், அழகன், சண்முகசுந்தரம், இரமேஷ் குமார், சண்முகப் பிரியன், செல்வராசு, செல்லப்பன், இளம் பிள்ளை சந்திரசேகர் ஆகியோர் சிறப்பாகச் செய்தனர்.

# டிசம்பர் 24, 25–ஈரோட்டில் மாநில மாநாடு

டிசம்பர் 24, 25 தேதிகளில் ஈரோட்டில் இரண்டு நாள் மாநில மாநாடு மற்றும் “மனுசாஸ்த்திர எரிப்பு போராட்ட விளக்க மாநாடு” நடத்துவது என ஈரோடு கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1929 இல் செங்கல்பட்டில் பெரியார் கூட்டிய சுயமரியாதை இயக்க முதல் மாநாட்டில் - புரட்சிகர தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நாளான பிப்ரவரி 28 இல் தமிழ்நாடு முழுவதும் - சமுதாயத்தை பிறப்பின் அடிப்படையில் கூறுபடுத்தும் - மனுசாஸ்திரத்தைத் தடைசெய்யக் கோரி - மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப் பட்டது.

செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தோழர்களுக்குக் கொள்கைப் பயிற்சி வகுப்புகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# திராவிடர் விடுதலைக் கழகம்: தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள்

***கழகத்தலைவர் கொளத்தூர் மணி கலந்துரையாடலில் அறிவித்த கழகப் பொறுப்பாளர்கள் பெயர் விவரம்:***

**தலைவர் : கொளத்தூர் தா.செ.மணி**

**பொதுச்செயலாளர் : விடுதலை க. இராசேந்திரன்**

**புதுச்சேரி மாநிலத் தலைவர்: லோகு.அய்யப்பன்**

**மாநிலப் பொருளாளர் : ஈரோடு ப.இரத்தினசாமி**

**மாநில பரப்புரைச் செயலாளர்: தூத்துக்குடி பால்.பிரபாகரன்**

**மாநில அமைப்புச் செயலாளர்: தி.தாமரைக்கண்ணன்**

**தலைமை நிலையச் செயலாளர்: தபசி குமரன்**

**மாநில வெளியீட்டுச் செயலாளர் : சூலூர் நா. தமிழ்ச் செல்வி**

**மாநில இணைய தளச் செயலாளர் : அன்பு. தனசேகரன்**

**பெரியார் தொழிலாளர் கழக அமைப்பாளர்கள்: கோபி. இராம. இளங்கோவன், பெ.திருமூர்த்தி**

**தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்கள்: கோவை இர. சிலம்பரசன், ஜெயங்கொண்டாம் சிவக்குமார், சென்னை ஜா. ஜெயந்தி**

**தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர்கள் : திருப்பூர் ஆசிரியர் வீ.சிவகாமி, புதுவை பேராசிரியர் சே. இராமக் கிருட்டிணன், ஈரோடு ஆசிரியர் ப. சிவக்குமார்.**

**சென்னை மண்டல அமைப்புச் செயலாளர்: அன்பு.தன சேகரன், (வடசென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம்)**

**சேலம் மண்டல அமைப்புச் செயலாளர்: மேட்டூர் அ.சக்திவேல் (சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர்).**

**கோவை மண்டல அமைப்புச் செயலாளர்: பல்லடம் சி.விஜயன் (கோவை மாநகரம், கோவை வடக்கு, கோவை தெற்கு, நீலகிரி, திருப்பூர்)**

**ஈரோடு மண்டல அமைப்புச் செயலாளர்: கோபி. இராம. இளங்கோவன் (ஈரோடு, நாமக்கல், கரூர்)**

**திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர்: த.புதியவன் (திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை)**

**தஞ்சை மண்டல அமைப்புச் செயலாளர்: நா.இளைய ராஜா (தஞ்சாவூர், நாகை, திருவாரூர், கடலூர்)**

**மதுரை மண்டல அமைப்புச் செயலாளர்: சி.இராவணன் (திண்டுக்கல், மதுரை, மதுரை புறநகர், தேனி, சிவகங்கை, விருதுநகர்)**

**நெல்லை மண்டல அமைப்புச் செயலாளர்: கோ.அ.குமார் (கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம்)**

## ஆகஸ்டு 17 முதல் மாவட்டக் கழகக் கூட்டங்கள்

*ஈரோடு கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்டந் தோறும் கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளன. கழகத் தலைவர், பொதுச்செயலாளர் பங்கேற்பர். மாநில கழகப் பொறுப்பாளர்கள் வாய்ப்புள்ள மாவட்டங் களில் பங்கேற்பார்கள்.*

*17.08.12 வெள்ளி மாலை 5.00 நெல்லை (தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி)*

*18.08.12 சனி காலை 10.00 திண்டுக்கல் (விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை)*

*18.08.12 சனி மாலை 5.00 திருச்சி, (திருச்சி, பெரம்பலூர், தஞ்சை, திருச்சி)*

*22.08.12 புதன் மாலை 5.00 தலைமை நிலையம், (வட சென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், வேலூர்)*

*23.08.12 வியாழன் மாலை 5.00 புதுச்சேரி*

*24.08.12 வெள்ளி மாலை 5.00 விழுப்புரம்*

*29.08.12 புதன் மாலை 5.00 திருப்பூர்*

*30.08.12 வியாழன் மாலை 5.00 ஈரோடு, கரூர்*

*04.09.12 செவ்வாய் மாலை 5.00 கோவை (கோவை மாநகரம், கோவை வடக்கு, கோவை தெற்கு)*

*05.09.12 புதன் காலை 10.00 மேட்டூர் (சேலம் மேற்கு)*

*05.09.12 புதன் மாலை 5.00 சேலம் (சேலம் கிழக்கு)*

*06.09.12 வியாழன் மாலை 5.00 குமாரபாளையம் (நாமக்கல்)*

*08.09.12 சனி மாலை 5.00 காவேரிப்பட்டிணம் (கிருஷ்ணகிரி)*

## கழக வளர்ச்சி நிதி–தோழர்கள் பேரார்வம்

*மாவட்ட கழகங்கள் சார்பில் கழக வளர்ச்சி நிதிகழகத் தலைவரிடம் தோழர்கள் அளித்தனர். வழங்கவிருக்கும் தொகையை அறிவித்து முதல் கட்டமாக நிதியும் வழங்கினர். அறிவித்த தொகையும் முதல்கட்டமாக வழங்கிய தொகையும் (அடைப்புக் குறியில்).*

| | | |
|---|---|---|
| சேலம் மேற்கு | - | ரூ.3,00,000 (5,00,000) |
| ஈரோடு | - | ரூ.1,00,000 (5,00,000) |
| சென்னை | - | ரூ.1,00,000 (3,00,000) |
| புதுவை | - | ரூ.70,000 (1,00,000) |
| சேலம் கிழக்கு | - | (ரூ.1,00,000) |
| கோவை | - | (ரூ.25,000) |
| இரா. வீரமணி (சேலம்) | - | ரூ.25,000 |
| ஆசைத்தம்பி (கள்ளக்குறிச்சி) | - | ரூ.10,000 |
| ஆசிரியர் செங்கோட்டையன் | - | ரூ.2000 (10,000) |
| மதுரை வாசுகி | - | ரூ.1,000 (10,000) |
| வடலூர் கலியமூர்த்தி | - | ரூ.1,000 (10,000) |
| தமிழர் முன்னணி (கரூர்) | - | ரூ.1,000 |


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535


## ‘விடியல்’ சிவா முடிவெய்தினார்



*விடியல் பதிப்பக உரிமையாளரும் ஏராளமான முற்போக்கு சிந்தனை கொண்ட நூல்களை வெளியிட்டு வந்தவருமான தோழர் விடியல் சிவா, 30.7.2012 அன்று கோவையில் முடிவெய்தினார். அவருக்கு வயது 57.*

*பெரியார் இயக்கத்துக்கு மிகப் பெரும் பங்களிப்பான எஸ்.வி. ராஜதுரை, வ. கீதா எழுதிய பெரியார் சுயமரியாதை சமதர்மம், பெரியார் ஆகஸ்ட் 15 நூல்களையும் இவரே வெளியிட்டார். குடிஅரசு தொகுப்புப் பணியில் தீவிர ஆர்வமும் ஒத்துழைப்பும் வழங்கியவர் சிவா. ‘குடிஅரசு’ மெய்ப்புத் திருத்தப் பணிக்கு தனது விடியல் அலுவலகத்தையே தந்து உதவியதோடு, பணியில் ஈடுபட்ட கொளத்தூர் மணி உள்ளிட்ட தோழர் களுக்கு, தமது இல்லத்திலிருந்து உணவு தயாரித் தும் வழங்கினார். விடுதலை இராசேந்திரன் எழுதிய ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்; பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதிகள் நூல்களை யும் விடியல் சிவாதான் மறுபதிப்பாக வெளி யிட்டார். விடியல் சிவாவின் வெளியீடுகள் அவரது தொண்டின் பெருமையை என்றென்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.*

*தோழருக்கு, வீர வணக்கம்!*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# அவதூறுகளை புறந்தள்ளி கொள்கைப் பணி தொடருவோம்!



**பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தபோது....**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கோபி இராம. இளங்கோவன், கடவுள் மறுப்பு மற்றும் ஆத்மா மறுப்பைக் கூற தோழர்கள் அதை எழுச்சியோடு வழிமொழிந்து முழக்கமிட்டனர். ஈரோடு இரத்தினசாமி வரவேற்புரையாற்றினார். புதுவை லோகு அய்யப்பன் துவக்க உரையாற்றினார். தொடர்ந்து, நாம் ஏன் பெரியார் திராவிடர் கழகத்தை விட்டுவிட்டு வேறு பெயரில் இயங்குகிறோம் என்று விளக்கிப் பேசிய விடுதலை க.இராசேந்திரன், நமது கழகத்தின் மீது வைக்கும் விமர்சனங்களுக்கு விரிவாக பதில் அளித்தார். முதலில் 200 பேர் கூடுவோம் என்று எதிர்பார்த்து, பின்னர் நாட்கள் நெருங்க நெருங்க 500 பேர் வருவார்கள் என்று உறுதி செய்து தான் இந்த மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இன்று இவ்வளவு பேர் வந்திருப்பது நாம் சென்றுக் கொண்டிருக்கிற பாதை மிகச் சரியானது என்பதை உறுதிச் செய்கிறது என்று குறிப்பிட்ட போது தோழர்கள் பலத்த கரவொலி எழுப்பினர்.

தொடர்ந்து பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "இங்கே விடுதலை இராசேந்திரன் விளக்கிப் பேசிய செய்திகளின் உண்மைகளை நீங்கள் ஆய்ந்து பார்க்க வேண்டும். இவை உங்களிடம் இதுவரை இங்கே சொல்லப்பட்ட செய்திகள் உங்களுக்காக மட்டும் சொல்லப்பட்டதே தவிர பரப்புவதற்கு அல்ல. தேவைப்படும்போது நமது தோழர்களோடு விவாதம் செய்து கொள்ளலாமே தவிர, இது பத்திரிகைக்கான செய்தியும் அல்ல. விமர்சனம் என்ற பெயரில் நமது தோழர்களுக்கு ஏராளமாக அனுப்பப்பட்டுள்ள அவதூறு அறிக்கைகள், கடிதங்கள் பற்றி, நமது தோழர்கள் விளக்கம் பெற வேண்டியது அவசியம் என்பதற்காகவே, இந்த விளக்கங்களை தந்துள்ளோம். இனி நமது கொள்கைப் பணிகள் தொடரும். எனவே ஏடுகளில் யாரும் வெளியிடக் கூடாது என்று முதலில் வேண்டுகோளாக வைக்கிறேன் என்று தனது உரையை தொடங்கினார். பொதுக் குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு நமக்கு இருந்தும் புதிய பெயரில் இயங்க வேண்டிய காரணததையும், அவசியத்தையும் விளக்கிப் பேசினார். மேலும் தனது உரையில் :

புதிய பெயர், புதிய கொடி, புதிய செய்தி ஏடு ஆகியவைகளோடு இயங்கலாம் என்று தான் முதலில் முடிவு செய்தோம். பெரியார் முழக்கம் ஏடு வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். இதுவரை பயன்படுத்தி வந்த கொடியை (தூத்துக்குடி பெரியார் பாசறையின் கொடி என்பதால்) நீங்களே பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லிவிட்டார்கள். எனவே நாம் அமைப்பிற்கு புதிய பெயர் தான் வைக்க வேண்டும்.

பெரியாரின் கொள்கைகள் சுயமரியாதையும், சமதர்மமும் ஆகும். பன்னாட்டு சுரண்டல்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் நாம் அதற்கு எதிராக போராட வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே, "சுயமரியாதை சமதர்மக் கழகம்" என்பதுதான் பொருத்தமான பெயராக இருக்கும் எனக் கருதினோம். ஆனால், 'திராவிடர்' என்ற சொல் தான் தமிழர் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது என்று பலரும் பேசி வருகிற இந்த சூழலில் நாம் திராவிடர் என்ற சொல்லை கைவிடுவது, போதிய புரிதலின்றி இதுவரை திராவிடர் என்று வைத்திருந்ததை இப்போதாவது தவறை உணர்ந்து சரி செய்து கொண்டதைப் பாராட்டுகிறோம் என்று சிலர் எழுதுவதற்குப் பயன்படலாமே தவிர பெரும்பாலான உழைக்கும் மக்களை கேவலப்படுத்தி பிரித்து வைத்திருக்கிற ஆரியத்துக்கெதிரான பண்பாட்டுப் புரட்சிக்குப் பயன்படாது என்பதால் நம்மை அடிமைகளாய் வைத்திருக்கும் ஆரியத்துக்கு எதிரான குறிச்சொல்லான 'திராவிடர்' என்ற சொல் அமைப்பின் பெயரில் அவசியம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். (கைதட்டல்) எனவே 'திராவிடர் சுயமரியாதை சமதர்மக் கழகம்' என்று வைக்கலாமா, 'திராவிடர் சுயமரியாதைக் கழகம்' என்று வைக்கலாமா என்று ஆலோசித்தோம். இதில் சுயமரியாதை என்ற சொல் வடமொழி என்பதால் தன் மதிப்பு என்று தமிழ்ப் படுத்தி, 'திராவிடர் தன்மதிப்புக் கழகம்' என்று வைக்கலாமா என்றும் கருதினோம். ஆனால், சுயமரியாதை என்ற சொல்லில் இருக்கும் வீரியம் தன்மதிப்பு என்பதில் இல்லை. எனவே இதுவும் கைவிடப்பட்டது. சமூக விடுதலை இல்லாமல் பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். அரசியலில் விடுதலை இல்லாமல் இந்திய தேசியத்திற்கு அடிமைப்பட்டிருக் கிறோம். பொருளாதாரத்தில் பன்னாட்டிற்கு அடிமையாக இருக்கிறோம். எனவே நமக்கு இப்போது தேவையாக இருப்பது பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டு சுரண்டலில் இருந்து விடுதலையே. எனவே 'திராவிடர் விடுதலைக் கழகம்' என்று முடிவு செய்தோம். இது புதிய பெயரல்ல. புதிய முன்னெடுப்பு என்றும் அறிவித்தார். தோழர்கள் தொடர்ந்து கரவொலி எழுப்பி, புதிய பெயரை வரவேற்றனர்.



உணவு இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் நிகழ்ச்சியின் துவக்கமாக நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி (ம.தி.மு.க.) வாழ்த்துரை வழங்கினார். ம.தி.மு.க. நகர செயலாளர் பூங்கொடி சாமிநாதன் வந்திருந்து வாழ்த்து தெரிவித்தார். முதுபெரும் பெரியார் தொண்டர் ஆசிட் தியாகராசன் அமைப்பைப் பாராட்டிப் பேசினார். மாவட்டத்திற்கு ஒருவராக கீழ்க்கண்ட தோழர்கள் உரையாற்றினர்.

திருப்பூர் துரைசாமி, கோவை பன்னீர்செல்வம், சேலம் (மேற்கு) முல்லை வேந்தன், நாமக்கல் சாமிநாதன், காஞ்சி டேவிட் பெரியார், மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், திண்டுக்கல் நல்லதம்பி, தூத்துக்குடி அம்புரோசு, சென்னை உமாபதி, கிருஷ்ணகிரி குமார், திருச்சி புதியவன், கன்னியாகுமரி சூசை, வடலூர் கலியமூர்த்தி, கரூர் காமராசு, சேலம் (கிழக்கு) டேவிட், பெரம்பலூர் தாமோதரன், விழுப்புரம் வெற்றிவேல், திருநெல்வேலி அன்பரசு, பொள்ளாச்சி விஜயராகவன், தஞ்சை பாரி, நாகை மகேஷ், வேலூர் திலீபன், சேலம் (மாநகரம்) பாலு ஆகியோர் பேசினர்.

இறுதியாக மாநில வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, மாநில பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தலைவர் நிறைவுரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில பொறுப்பாளர் சிவக்குமார் நன்றியுரையாற்றினார். ✦

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th August 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

# ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ அமைப்புக் கூட்டங்கள் எழுச்சி நடை

**‘திராவிடர் விடுதலைக் கழக’ம் தொடங்கியவுடன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மண்டலம் வாரியாக கழக அமைப்புக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் உற்சாகத்துடன் கூட்டங்களில் பங்கேற்று வரு கின்றனர். ஆக. 12 ஆம் தேதி அமைப்பு தொடங்கியவுடன், ஆக. 17 ஆம் தேதி நெல்லையிலும், ஆகஸ்ட் 18 இல் காலை திண்டுக்கல்லிலும் மாலை திருச்சியிலும் மண்டல அமைப்புக் கூட்டங்கள் நடந்தன. மாவட்டக் கழகம், ஒன்றிய கழகத்துக்கு புதிய நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டனர்.**

17.8.2012 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு, பாளையங்கோட்டை ஆதி திராவிடர் மகாசன சங்க கட்டிடத்தில், திராவிடர் விடுதலைக் கழக நெல்லை மண்டல கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாநில பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நெல்லை மண்டல அமைப்புச் செயலாளர் குமார் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் பலரும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர். இறுதியாக கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

**குமரி மாவட்ட பொறுப்பாளர்கள் :** தலைவர் - சூசையப்பா; செயலாளர் வழக்குரைஞர் வே. சதா; பொருளாளர் - பேபி ஜெயக்குமார்; அமைப்பாளர் - சேவியர்.

**திருநெல்வேலி மாவட்டம் :** அமைப்பாளர் - சி.ஆ. காசிராசன்; மாவட்ட துணை அமைப்பாளர் - கீழப்பாவூர் அன்பரசு; தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் - கருப்பசாமி.

**தூத்துக்குடி மாவட்டம் :** தலைவர் - பொறிஞர் சி. அன்புரோசு; துணைத் தலைவர் - வே. பால்ராசு; செயலாளர் - க. மதன்; துணைச் செயலாளர் - ச.கா. பாலசுப்பிரமணியன்; பொருளாளர் - ரவிசங்கர்.

**தூத்துக்குடி மாநகர் பொறுப்பாளர்கள் :** தலைவர் - சா.த. பிரபாகரன்; செயலாளர் - பால். அறிவழகன்; பொருளாளர் - அமிர்தராசு; கழுகுமலை ஒன்றிய அமைப்பாளர் - கனகராசு; திருவைகுண்டம் ஒன்றிய அமைப்பாளர் - சந்தனராஜ்; ஆழ்வை ஒன்றிய தலைவர் - நாத்திக முருகேசன்; ஆழ்வை ஒன்றிய செயலாளர் - இரா. உதயக்குமார்.


நெல்லையில்

### திண்டுக்கல்லில்

18.8.2012 சனிக் கிழமை அன்று காலை 11 மணிக்கு திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி சி.எம். மண்டபத்தில், திராவிடர் விடுதலைக் கழக மதுரை மண்டல கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை க. இராசேந்திரன், மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக்கண்ணன், மதுரை மண்டல அமைப்புச் செயலாளர் இராவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் : தலைவர் - க. பெரியார் நம்பி; செயலாளர் நா. நல்ல தம்பி; அமைப்பாளர் - விஜி; தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் - ஜவகர்.

**பழனி ஒன்றியம் :** தலைவர் - மா. முருகன்; செயலாளர் - சி. கருப்புச்சாமி; அமைப்பாளர் - அ.இளங்கோவன்; துணைத் தலைவர் - மகுடீஸ்வரன்; துணைச் செயலாளர் - முத்துச்சாமி.

**பழனி நகரம் :** செயலாளர் - ம. முத்துக்குமார்; அமைப்பாளர் - பத்மநாபன்.

**ஒட்டன்சத்திரம்** ஒன்றியம்: தலைவர் - துரை. தங்கவேல்; செயலாளர் சு.சுரேஷ்; அமைப்பாளர் - ரெ. கதிர்வேல்.

**ஒட்டன் சத்திரம் நகரம் :** தலைவர் - சின்னச்சாமி; செயலாளர் - மூர்த்தி; ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் அமைப்பாளர் - வடிவேல்; தொப்பம்பட்டி ஒன்றியம் அமைப்பாளர் - மாயவன்; திண்டுக்கல் ஒன்றியம் அமைப்பாளர் - த. திருப்பதி.

**வத்தலக்குண்டு** ஒன்றியம் அமைப்பாளர் - ஜெயப்பாண்டி.

**தேனி மாவட்டம் :** தலைவர் - க. சரவணன்; செயலாளர் - பா.குமரேசன்.

**மதுரை மாவட்டம் :** தலைவர் - முருகேசன்; செயலாளர் - பாண்டியன்.

மதுரை மண்டல தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் - உதயசங்கர்.

### திருச்சியில்

18.8.2012 சனிக் கிழமை அன்று மாலை 5 மணிக்கு திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் அந்தோனியர் அரங்கில், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக்கண்ணன், திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

**திருவாரூர் மாவட்டம் :** மாவட்ட அமைப்பாளர் இரா. காளிதாஸ்

**மன்னார்குடி** ஒன்றிய அமைப்பாளர் : சேரன் ரமேஷ்

**நீடாமங்கலம்** ஒன்றிய அமைப்பாளர் - நல்லிக் கோட்டை முருகன்.

**கோட்டூர்** ஒன்றிய அமைப்பாளர் - பொறியாளர் அனுராஜ்

**அரியலூர்** மாவட்ட அமைப்பாளர் - திருமானூர் கார்த்தி.

**பெரம்பலூர் மாவட்டம் :** தலைவர் - துரை. தாமோதரன்; அமைப்பாளர் - பழனி முருகன்; ஒன்றிய அமைப்பாளர் - செந்தில் குமார். நகர அமைப்பாளர் - இராஜேஸ்குமார்.

**தஞ்சை மாவட்ட** அமைப்பாளர்: கு. பாரி

**திருச்சி** மாவட்டக் காப்பாளர் - டாக்டர் எஸ்.எஸ். முத்து; தலைவர் - மீ.இ. ஆரோக்கியசாமி; செயலாளர் - கந்தவேல் குமார்; அமைப்பாளர் - நா. குணராஜ்; பொருளாளர் - மனோகரன்.

**தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்** - செந்தில்

**தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர்** - ஞான சண்முகம்

**திருவெறும்பூர்** ஒன்றிய அமைப்பாளர் - இராசு

**திருவரங்கம்** நகர அமைப்பாளர் - அசோக்

தமிழகம் முழுவதும் அமைப்புக்கான பயணம் தொடர்ந்து நடக்கிறது.


திருச்சியில்

# பன்னாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்க்கப்படும் தமிழக மின்சாரம்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

கூடங்குளம் அணுஉலையை எதிர்ப்பது ஏன்? எனும் தலைப்பில் விளக்கப் பொதுக் கூட்டம் 25.3.2012 மாலை 6.45 மணிக்குப் புதுச்சேரி பெரியார் திடலில் (சிங்காரவேலர் சிலையருகில்) நடைபெற்றது. பெருந்திரளாகப் பொது மக்களும் இயக்கத் தோழர்களும் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டத்திற்கு புதுச்சேரி கழக அமைப்பாளர் தந்தைப் பிரியன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். சமர்பா குமரனின் இன எழுச்சிப் பாடல்களுடன் கூட்டம் துவங்கியது. துணைத் தலைவர் வீராசாமி நன்றியுரை வழங்கினார். கூட்டம் இரவு பதினொரு மணி வரை நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றுகையில் - “உலக நாடுகளெல்லாம் இந்தியாவை ஒரு குப்பைத் தொட்டி போலத்தான் நடத்தி வந்திருக்கின்றன. இரண்டாம் உலகப் போரின்போது வெடி பொருளாகப் பயன்படுத்தி மிஞ்சிப் போன, மண்ணைக் கெடுக்கின்ற வேதிப் பொருள்களையெல்லாம் உரமாக மாற்றி எம்.எஸ்.சாமிநாதன் என்கின்ற பார்ப்பனனை வைத்து இந்தியாவில் பிரபலப்படுத்தினர். ஆஸ்பெஸ்டாஸ் அதிகமாகக் கொண்ட கப்பலைப் பிரான்சு நாட்டில் உடைத்தால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து என்று நம் நாட்டில் வந்து உடைத்தனர். உலகத்தில் கைவிடப்படுகின்ற, அங்கு காலாவதி ஆகின்ற தொழில் நுட்பமெல்லாம் நம் தலையில் கட்டப்படுகிறது.

வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கியதால், அவற்றின் கழிவுகளால் அதிகம் புற்று நோய் வரும் இடங்களாக வாணியம்பாடி, கல்பாக்கம், ஆம்பூர், திருப்பூரும் இருக்கின்றன. இரண்டாயிரம் பேர் வேலை செய்த ஸ்டாண்டர்டு கம்பெனியை மூடிவிட்டு 400 பேர் வேலை செய்கின்ற போர்ட் கம்பெனியைத் திறக்கிறார்கள். நம் நிலமும் வேலை வாய்ப்பும் இவர்களால் பறி போகிறது.

2010-2011 ஆம் ஆண்டில் பன்னாட்டு நிறுவனங்களால் இந்தியாவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்பட்ட ‘ஆட்டோ மொபைல்ஸ்’ 2,34,00,000 ஆகும். அதற்கே புதிய மின் உற்பத்தி நிலையங்களை அவர்கள் அமைக்கவில்லை.

1994 ஆம் ஆண்டில் இந்தியாவில் 81,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அன்று 52 சதவீதம் கிராமங்களுக்கு மின் வசதி இல்லை. 2011 ஆம் ஆண்டில் 1,82,000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டது. இன்னும் மின்சார வசதி பெறாத கிராமங்கள் 43 சதவீதம் உள்ளன. உற்பத்தியாகும் மின்சாரம் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தான் பயன்படுகிறது. தன்னை (சிறுதொழில் செய்வோர்) அழிக்கின்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகச் செயல்பட முடியாதவர்கள், கூடங்குளம் அணுஉலைக்கு ஆதரவாகப் போராட முன் வருகிறார்கள்.

அணுஉலை வெடித்தால் 2 மணி நேரத்தில் அனைவரும் 30 கிலோ மீட்டருக்கு அப்பால் உடனே சென்றுவிட வேண்டும். அணுஉலையிலிருந்து 20 கி.மீ. சுற்றளவில் ஒரு லட்சத்திற்கும் மேலாக மக்களோ, சுற்றுலாத் தளமோ இருக்கக் கூடாதென்று இந்திய அணு சக்தி ஆணையம் வரையறுத்திருக்கின்றது. ஆனால் அரசாங்கம் கொடுத்த அறிக்கையில் நாகர்கோவிலில் மொத்தம் 2980 பேர் மட்டுமே வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகர்கோவில் 2 கி.மீ. தொலைவில்தான் உள்ளது.

அணுஉலைக்கடியில் பூமியிலுள்ள நெருப்புப் பிழம்பை மூடிய படிமங்கள் வெறும் 110 மீட்டர்தான் இருக்கிறது. ஆனால், இறுகிய பாறை 140 கி.மீ. ஆழம் வரை இருக்கவேண்டும் என்பது அணுசக்தி ஆணையத்தின் வரையறை.. மக்கள் சேர்ந்து போராட்டம் தொடங்கி, அதற்குப் பின்னால் அரசியல் கட்சிகள் ஓடிய போராட்டம் இது ஒன்றுதான்.

அணுஉலை கூடங்குளத்தில் வேண்டுமென்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் கேரளா மற்றும் மராத்திய மாநிலம் ஜெய்தாபூரில் அணுஉலையை எதிர்க்கிறார்கள். இராசபக்சே தமிழர்களுக்குத் தனிநாடு கொடுத்தால்கூட இவர்கள் (மார்க்சிஸ்ட்கள்) ஒன்றுபட்ட இலங்கைதான் தீர்வு என்பார்கள். அணுஉலை அமைக்க 13000 கோடி ரூபாய் செலவு செய்தது வீணாகிவிடும் என்கிறார்கள்.

2005-2006 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி பன்னாட்டு நிறுவனங்களுக்கு 3,74,937 கோடி ரூபாயை வரித் தள்ளுபடி செய்துள்ளது. இது வீண் விரயம் இல்லையா? அணுஉலைக்குப் பதிலாக அதே கட்டிடத்தில் எரி பொருளாக இயற்கை வாயுவைப் பயன்படுத்து என்கிறார்கள் அணுஉலை எதிர்ப்பாளர்கள்.

மன்மோகன்சிங் நிதியமைச்சராக இருந்த 1994 ஆம் ஆண்டில் இனிமேல் மின் நிலையங்களைக் கட்டுவதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதியில்லை என்றார். தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 4 தனியார் அனல் மின் நிலையங்கள் தங்களுக்கு நிலுவைத் தொகையை அரசாங்கம் தரவில்லை என்று கூறிக் கடந்த பிப்ரவரி முதல் தேதி முதல் மின் உற்பத்தியை நிறுத்தினாலும், அவர்களுக்கு தமிழக அரசு தினமும் 2 கோடி ரூபாயை இழப்பீடாகத் தருகின்றது. மத்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய 3,200 மெகாவாட் மின்சாரத்தில் 1100 மெகாவாட் குறைவாகத் தருகின்றது. அதை முழுமையாகக் கொடுத்தாலே தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறை போய்விடும்.

மாற்று மின் திட்டங்களைக் கைக்கொள்ளுங்கள்! ஆபத்தான அணுமின் நிலையங்களைக் கைவிடுங்கள்! போராடுகின்ற மக்கள் போராட்டத்திற்குத் துணை நில்லுங்கள்! என்றார் கொளத்தூர் மணி.

புதுவை தலைவர் லோகு. அய்யப்பன் உரையாற்றுகையில் - கூடங்குளம் அணுஉலையைத் திறக்கக் கூடாது என்று போராடும் போராட்டக் குழு மற்றும் அதற்குத் தலைமையேற்றிருக்கின்ற உதயகுமார், வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நிதி பெற்றார். மூன்று தொண்டு நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு ஜெர்மானியர் கண்டுபிடிக்கப்பட்டார் என்ற செய்தியெல்லாம் ‘தினமலர்’ போன்ற பத்திரிகையிலெல்லாம் போட்டு மக்களை நம்ப வைத்தீர்கள். அவரை ஜெர்மனிக்கே நாடு கடத்திவிட்டோம் என்கிறீர்களே, அவர் இங்கிருந்தால் போராட்டக் குழுவிற்கு தான் பணம் கொடுக்கவில்லையென்ற உண்மையைச் சொல்லிவிடுவார் என்ற பயத்தினாலா? ஆனால், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுந்தபோது அப்படிப்பட்ட எந்தச் செய்தியும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று இதே நாராயணசாமி நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார். அப்போ, அது வேற வாய், இது வேற வாயா? போராடுபவர்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள் என்றார்.

## ‘மனு சாஸ்திர’ நூலுக்கு விளம்பரம்!

பார்ப்பன பாசிச கருத்தாக்கமான மனுசாஸ்திரத்தை இப்போதும் புதிய புதிய பதிப்புகளாக அச்சிட்டு பார்ப்பனர்கள் பரப்பி வருகிறார்கள். ‘சூத்திர’ இழிவுகளை நிலைநிறுத்தும் இந்த மனுசாஸ்திரத்தை பெருமைப்படுத்தி, ‘துக்ளக்’ ஏடு மதிப்புரைகள் எழுதி வருவதை ஏற்கனவே வெளியிட்டோம். இது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பு ஏடான ‘உங்கள் நூலகம்’ மாத இதழில் (ஆகஸ்ட்) மனுதர்ம நூலுக்கு வெளி வந்துள்ள விளம்பரம்:




மனுதர்மத்தை பெருமைப்படுத்தி பார்ப்பனர்கள் எழுதுவதும், அதற்கு விளம்பரம் தந்து புதிய பதிப்புகளை வெளியிடுவதும் வெளிப்படையாகவே அரங்கேறி வருகிறது. நாட்டின் பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத மக்களை பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்; அடிமைகள்; விலைக்கு வாங்கப்பட்டவர்கள் என்று அச்சிட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழன் “சொரணையற்று” குறட்டைவிட்டுத் தூங்குகிறான்!

## வடமொழியை வளர்த்த சோழர்கள்

ராஜ ராஜ சோழனின் பெருமை பேசுவோருக்கு பதிலடி தந்து துரை. இளமுருகு எழுதிய நூல் ‘ராஜ ராஜ சோழனின் மறுபக்கம்’. ராஜராஜன் பார்ப்பன மேலாண்மையை உயர்த்திப் பிடித்ததை ஆதாரங்களுடன் விளக்குகிறது. நூலிலிருந்து... ஆகஸ்டு 9 இதழ் தொடர்ச்சி...

கல்வியிலும் வடமொழிக்கே முழு உரிமை, தமிழுக்கு என்று ஒரு கல்விச் சாலை அமைத்ததாகக் கல்வெட்டுச் சான்று கிடையாது. ஆனால் முழுவதும் வடமொழி இலக்கணம், புராணங்கள், சிவ தருமம், சோம சித்தாந்தம், ராமானுச பாடியம், பிரபாகரின் மீமாம்சம், வியாகரணம் ஆகியவற்றை மட்டும் கற்பிக்க வடஆற்காடு கப்பலூர், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆணியூர் (ஆனூர்) தென்னாற் காட்டில் இராசஇராச சதுர்வேதி மங்கலம் என்னும் எண்ணாயிரம், இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எழுதும் கை நோகும், நினைக்க மனம் நோகும். இந்தச் சோழர்கள் பார்ப்பனரை அடக்கி வைத்தவர்கள் என்று முனைவர்கள் சொல்லு கிறார்கள். என்ன கொடுமை இது! படித்தவன் சூது வாது செய்யக் கூடாது என்ற பாரதியின் வாக்கை அவர்கள் மறந்து விட்டனர் போலும்.

கோவில் பணிகளில் குறிப்பாகக் கருவறைப் பணிகளில் பார்ப்பனர்களே அமர்த்தப்பட்டனர். இதை இராச இராச சோழன் காலத்து கல்வெட்டு ஒன்றின் மூலம் நாம் எளிதாக அறியலாம்.

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்படுகிறது. தமிழ் எழுத்தில் உள்ளது. காலம் 1014 ஸ்ரீ ராஜராஜன் தஞ்சைப் பெரு உடையார் கோவிலுக்குச் சோழ மண்டலத்திலும் பாண்டிய மண்டலத்திலும் தொண்டை நாடான ஜெயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள பிரம்மதேயங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊர்களில் நிலம், உறவினர், பொருள் உடையராய்ப் பார்த்து ஸ்ரீ பண்டாரம் செய்வதற்கு பிராமணர்களையும் திருபரிசாரகம் (சமையல்) செய்வதற்கு மாணிகளையும் (திருமணம் ஆகாதவர்கள்) கணக்கு எழுதுவதற்குக் கரணர்களையும் சந்திர சூரியர்கள் உள்ளவரை நியமிக்க அனுப்ப வேண்டும் என்று ஆணைபிறப்பித்ததைச் சுட்டுகிறது. இது குறித்து ஆசிரியர் எழுதுவது இதை இன்னும் தெளிவாக விளக்கும். கருவறை சம்பந்தமான ஊழியஞ் செய்பவர்கள் என்பதால் இதில் குறிப்பிடப் பட்டுள்ள திருப்பரிசாரகர்கள், மாணிகள், பண் டாரிகள் ஆகியோர் “பார்ப்பனர்”களாக நியமிக்கப்பட்டனர். தஞ்சைப் பெருவுடையார் கோவில் உள்பட எல்லாக் கோவில்களும் பார்ப்பனர்களின் கூடாரமே என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இந்த ஒரு சான்று போதாதா?

இதை மற்றும் ஒரு கல்வெட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். கோவிலுக்குப் பணியாளர்களும் தேவை அல்லவா? கருவறைக்குள் நுழையும் அனுமதி இல்லாத வேலைகளான மெய்க்காவல், ஆடற் பெண்டிர் ஆகியோருக்கு வேலைக்கு ஆள் எப்படி எடுத்தான்? ஊர் சபையினருக்கும் அதாவது பிரம்மதேயம் அல்லாத மற்ற ஊர்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளான். ராஜராஜேச்சுவரம் உடையார்க்கு சோழ மண்டலத்திலுள்ள பிரம்மதேயங்களிலிருந்தும், ஊர்களிலிருந்தும் மெய்க்காவலர்களை அனுப்ப வேண்டும்.

அதாவது கருவறை தொடர்பான வேலைகளுக்கு பிரம்மதேயத்தில் உள்ள பார்ப்பனர்கள் மட்டும்! மற்ற வேலைகளுக்கு ஊர் சபையினர்! இதுதான் இராசராச சோழனின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை! இதுதான் பார்ப்பனர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பது? நல்ல வேடிக்கை.

வெளியீடு:
நுண்மை பதிப்பகம்,
48ஏ வடக்கு ஆண்டார் தெரு,
திருச்சிராப்பள்ளி-2, விலை. ரூ.70

# சமூகத்தை ஆட்டிப் படைத்த மனுதர்மம்!

*தோழர் அருணன் எழுதிய ‘தமிழகத்தில் – சமூக சீர்திருத்தம் – இரு நூற்றாண்டு வரலாறு’ நூலிலிருந்து.*

புராதன பொதுவுடமைச் சமுதாயமானது தனது உள் பலவீனத்தால் சிதைந்தபோது உலகில் அடிமைச் சமுதாய அமைப்பு எழுந்தது. இந்தியாவிலும் எழுந்தது. இங்கே வர்ணாஸ்ரமம் என்கிற வடிவத்தில் அது எழுந்தது. மனிதர்களை பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பிறப்பின் அடிப்படையில் நால் வருணங்களாகப் பிரிக்கிற அந்த அமைப்பில் சூத்திரர்களின் நிலை கிட்டத்தட்ட அடிமை நிலையாகவே இருந்தது என்றால், இந்த நால் வருணத்திற்கு அப்பாற்பட்ட சண்டாளர்கள் என்பவர்களின் நிலையோ அடிமை நிலையேதான்.

கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது என்று கூறப்படுகிற “மனு ஸ்மிருதி” என்கிற மனு நீதி இப்படிக் கூறுகிறது -

1. “சூத்திரர்களுக்கு கடவுள் விடுத்துள்ள ஒரே வேலை பிராமணர், ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று பிரிவினருக்கும் பணிவோடு ஊழியம் செய்வதே.” (I 91)

2. “ஒரு சண்டாளனை, வீட்டு விலக்காகியுள்ள ஒரு பெண்ணை, சாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட ஒருவனை, (சமீபத்தில்) பிரசவமாகியுள்ள ஒரு பெண்ணை, ஒரு பிரேதத்தை, பிரேதத்தைத் தொட்ட ஒருவனை யதேச்சையாகத் தொட நேர்ந்துவிட்டால் குளிப்பதன் மூலம் மீண்டும் ஒருவன் தனது பரிசுத்தத்தைப் பெறுவான்.” (V 85)

சூத்திரர்கள் கிட்டத்தட்ட அடிமை நிலையில் என்றால் சண்டாளர்கள் பிரேதத்துடன் இணையாக வைக்கப்பட்டிருந்ததைக் காணலாம். உண்மையில் தமிழகத்தில் அடிமை முறை என்பது 19 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. “19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகள் வரை விவசாய அடிமை முறையை ஆதரிப்பதாகவே பிரிட்டிஷ் அரசின் அணுகுமுறை இருந்தது. உதாரணமாக, வருவாய் வாரியத்திற்கு தஞ்சாவூர் கலெக்டர்எழுதிய ஒரு கடிதத்தில் ஓடிப் போன அடிமைகள் மீண்டும் அவர்களது எஜமானர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், மற்றொரு எஜமானரால் சட்ட பூர்வமற்ற முறையில் வைத்துக் கொள்ளப்பட்ட ஓர் அடிமையை அவரின் ஒரிஜனல் எஜமானர் மீட்டுக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். தங்களின் எஜமானர்களுக்காக அடிமைகள் அவசியம் வேலை பார்த்தேயாக வேண்டுமென கட்டாயப்படுத்தும் அதிகாரம் காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்றுகூட அவர் பரிந்துரை செய்தார். ஓடிப்போன அடிமைகளைப் பிடித்துக் கொடுப்பதில் இந்தக் காலத்தில் கலெக்டர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொண்டனர். உதாரணமாக, திருச்சி கலெக்டர் தனது மாவட்டத்திலிருந்து ஓடிப்போன 15 பள்ளர்களை திருப்பி அனுப்புமாறு சேலம் கலெக்டரைக் கேட்டுக் கொண்டு கடிதம் எழுதினார். தஞ்சாவூரிலிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதிக்கும் இது போன்ற கடிதம் எழுதினார். 1830 இல் திருச்சி கலெக்டர் என்.எஸ்.கேமரோன் தனது மாவட்டத்தைச் சார்ந்த ஒரு “பிராமண” நிலப்பிரபுவிடமிருந்து ஓடிப்போன 10 பள்ளர்களைத் திருப்பி அனுப்புமாறு சேலம் கலெக்டருக்கு கடிதம் எழுதினார்” என்று கூறுகிறார் வரலாற்றுப் பேராசிரியர் சி.பரமார்த்தலிங்கம்.

அடிமை நிலையில் இருத்தப்பட்டிருந்த சண்டாளர்கள் எனப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1843 ஆம் ஆண்டின் அடிமை ஒழிப்புச் சட்டம் V மற்றும் 1861 ஆம் ஆண்டின் இண்டியன் பீனல்கோடு சட்டம் XLV ஆகியவற்றின் மூலம் சட்டப்பூர்வ விடுதலை கிடைத்தது என்றாலும், நடைமுறையில் அவர்களுக்கு விடுதலை கிட்டவில்லை. சமூக ரீதியில் அவர்கள் தொடர்ந்து அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். 1871 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை இவ்வாறு கூறியது - “பரம்பரை அடிமை முறை எனும் நுகத்தடியிலிருந்து அதனால் எழுந்த சட்டபூர்வ தொல்லைகளிலிருந்து ஒரு சமூகம் என்ற முறையில் அவர்களை (அடிமைகளை) பிரிட்டிஷ் நிர்வாகம் விடுதலை செய்திருந்தாலும் சமூக அடுக்கில் அவர்கள் இன்னும் படுபாதாளத்திலேயே இருந்தனர். பொது பிரயாணிகள் படகுகளில் ஒரு பறையர் தனது முகத்தை காண்பித்துவிட முடியாது. அரசுப் பள்ளிகள் மற்றும் பொது மக்கள் நிதி உதவியோடு நடக்கிற பள்ளிகளிலும் இதே நிலைதான்.”

மனுதர்மமானது செல்லரித்த ஏடுகளிலே இருந்த மந்திரமல்ல; இந்த நாட்டில் நடைமுறையிலே இருந்த சட்ட, விதி. இதனை இந்த அறிக்கை தெளிவாக நிரூபிக்கிறது.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் அபேதுபே (Abbe Dubois) என்கிற பிரெஞ்சுக்காரர் இந்தியாவிற்கு வந்தார். இங்கே - குறிப்பாக தென்னிந்தியாவில் - சுமார் 30 ஆண்டுகள் தங்கியிருந்து இந்த மக்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்தார். இதன் விளைவாக “இந்திய மக்கள்” என்கிற நூலினை பிரெஞ்சு மொழியில் 1806 இல் எழுதி முடித்தார். இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 1820 இல் வெளி வந்தது. அன்றைய “தமிழ் கூறும் நல்லுலகம்” எப்படி இருந்தது என்பதை மேலும் நன்கு அறிந்து கொள்ள இந்த நூலிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன:

1. “நான்கு பிரதான பிரிவுகளில் சூத்திரர்களே அதாவது விவசாயிகளே எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். பறையர்களையும் சேர்த்துப் பார்த்தால் இந்திய மக்கள் தொகையில் இவர்கள் குறைந்தபட்சம் ஆறில் ஐந்து பங்கு இருப்பர்.

2. “நிறைய உபசாதிகளைக் கொண்ட பகுதியாக தமிழ் பேசும் பகுதி எனக்குப்பட்டது. அவ்வளவு உபசாதிகளை தக்காணத்தில்கூட நான் பார்க்கவில்லை. மைசூரிலும் மலபார் கடற்கரைப் பகுதியிலும்கூட இல்லை.”

## வைசியர்கள் சூத்திரர்கள் சண்டாளர்கள் ஆகியோர் இடங்கை, வலங்கை என இரு பெரும் பிரிவுகளாகப் மோதினர்

3. “முதல் சட்ட நிபுணர்களால் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இந்துக்களில் உயர்ந்த இடத்தை வகித்தவர்கள் பிராமணர்களே. அடுத்து ராஜாக்கள். யார் உயர்ந்தவர்கள் என்பதில் விவசாயிகளான சூத்திரர்களுக்கும், வியாபாரிகளாகிய வைஸ்யர்களுக்கும் இடையே போட்டி இருந்தது.”

4. “இந்து சாதிகளில் பெரும்பாலானவை இடங்கைப் பிரிவிலோ அல்லது வலங்கைப் பிரிவிலோ அடக்கம். இடங்கைப் பிரிவில் அனைத்து வைஸ்யர்களும் பாஞ்சாலர் எனப்பட்ட ஐந்து கைவினைஞர் சாதிகளும் மற்றும் சூத்திரர்களில் மிகவும் கீழ்நிலைப்பட்டவர்களும் இருந்தனர். இதில் சக்கிலியர் எனப்பட்ட சாதிகளிலேயே மிகக் கீழாகக் கருதப்பட்ட சாதியும் இருந்தது. வலங்கைப் பிரிவில் சூத்திரர்களில் உயர்ந்த பிரிவினர் இருந்தனர். பறையர்கள் இவர்களின் வலுவான முன்னணிப் படையாக விளங்கினர். அவர்களுக்கு ‘வலங்கை மாந்தர்’ எனும் பட்டப் பெயர் இருந்ததிலிருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம். இந்த இரு பிரிவுகளுக்கிடையே கடும் பகைமை இருந்து வந்தது. இரு பிரிவுகளுக்கிடையே ஏற்படும் மோதல் பெரும் அச்சத்தையும், கடுமையான துன்பத்தையும் உருவாக்கி வந்தது. “பிராமணர்கள்”, “ஷத்திரியர்கள் மற்றும் சூத்திரர்”களில் பல பிரிவுகள் நடுநிலையாளர்களாகக் கருதப்பட்டனர். இரண்டு கைப்பிரிவினர்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த அனைத்து உரிமைகளையும் அந்தஸ்துகளையும் இவர்கள் அனுபவித்தனர். அதே நேரத்தில் இவர்கள் இந்த இரண்டு கைப்பிரிவுகள் எதிலும் சேராதிருந்தனர். இரண்டு கைப்பிரிவுகளுக்கு மிடையே கடும்மோதல் எழுந்த போது மத்தியஸ்தம் செய்து வைக்க இந்த நடுநிலை சாதியினர் அழைக்கப்பட்டனர்.”

5. “நான் கண்ணாரக் கண்ட ஒரு காட்சியை விவரிக்கிறேன். பறையர்களுக்கும், சக்கிலியர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலினால் அந்த மாவட்டம் முழுவதிலுமே பெரும் பதட்டமும், பயங்கரமும் நிலவியது. மராட்டிய இராணுவம் படையெடுத்து வருவதுபோல பயந்துகொண்டு மக்கள் தத்தம் கிராமங்களை விட்டு வெளியேறினர்.. மோதலுக்குக் காரணம் என்னவென்றால், திருவிழா ஒன்றில் சக்கிலியர் ஒருவர் தனது தலைப்பாகையில் சிவப்புப் பூ வைத்திருந்தார் என்பதே. அந்த நிறப் பூவை வைத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை என்பதுதான் பறையர்களின் வாதம்.”

பிரெஞ்சுக் காலனியாக இருந்த புதுச்சேரியில் 18-ம் நூற்றாண்டில் துபாஷியாக (மொழிப் பெயர்ப்பாளராக) பணியாற்றிய ஆனந்தரங்கப் பிள்ளை எழுதி வைத்துச் சென்றுள்ள நாட்குறிப்புகளிலும் இந்த இடங்கை- வலங்கை மோதல் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

மொத்தத் தமிழ் மக்களும் சாதிவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தது மட்டுமல்ல, முதல் இரண்டு வருணத்தவரே சகல அந்தஸ்துகளையும், அதிகாரங்களையும் உடையவர்களாக இருந்தனர் என்பது மட்டுமல்ல, வைசியர்கள் - சூத்திரர்கள் - சண்டாளர்கள் ஆகியோர் இடங்கை, வலங்கை என இரு பெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டு மோதிக் கொண்டிருந்தனர். அப்படி இருக்கும்படி செய்யப்பட்டிருந்தனர். அதில் குளிர்காயும் மத்தியஸ்தர்களாக முதல் இரண்டு வருணத்தவர் இருந்தனர்.

பிரமிட் வடிவிலான இந்த வர்ணாஸ்ரம அமைப்பைக் குலைக்க முனைவோர்க்கு கடும் தண்டனை தருகிறது மனுநீதி.

1. “ஒரு புரோகிதரின் மனைவியுடன்கள்ள உறவு கொண்ட அடிமைக்குத் தண்டனை மரணம்” (VIII 359)

2. “உறவினர் பாதுகாப்பில் இருக்கும் இரு பிறப்பாளர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் தாழ்ந்த வர்ணத்தான் கள்ள உறவு கொண்டிருந்தால் அவனுக்குத் தண்டனை அவன் மர்ம உறுப்பை அறுக்க வேண்டியது; (உறவினர்) பாதுகாப்பில் இல்லாத ஒரு பெண்ணுடன் அவன் உறவு கொண்டிருந்தால் அதற்குத் தண்டனை அவன் உறுப்புக்களையெல்லாம் வெட்டுவதோடு அவன் சொத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும்.” (VIII 374)

வர்ணங்களின் பரம்பரைத் தூய்மையைப் பாதுகாப்பதற்காக வகுக்கப்பட்ட இந்த தண்டனைகள் கற்பனைக் கதையல்ல; அல்லது ஒரு வெறியனின் வெறும் விருப்பங்களுமல்ல. அவையே வாழ்க்கைச் சட்டங்கள். சிற்சில மாறுதல்களுடன் மனுநீதியே 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழக்கை நியதியாக இங்கே இருந்திருக்கிறது. இன்னும் ஆதாரம் தருகிறார் அபே துபே -

1. “ஒரு பறையர் தனது சொந்த சாதியை மறைத்து பிராமணர்களோடோ அல்லது சூத்திரர்களோடோ பழகினால், அவர்களோடு சேர்ந்து உணவு உண்டால், அவர்களது உணவைத் தொட்டால் அவரது உயிர் பறிபோகக் கூடிய ஆபத்து உண்டு. விஷயம் தெரிய வந்தால் அந்த இடத்திலேயே கொலை செய்யப்படுவார். ஆனால், இப்படிக் கொலை செய்வது என்பது நிதானமான விசாரணைக்குப் பிறகு தரப்படுகிற தண்டனை என்றில்லாமல் பொதுவாக உயர்சாதி உணர்விலிருந்து அந்த நேரத்தில் வெளிப்பட்ட வெறியினால் செய்யப்படுகிற செயலாக இருக்கும். யூதர்களின் வரலாற்றிலும் இத்தகைய சில உதாரணங்கள் உண்டு. சில சாதிகளில் சில விஷயங்களுக்கு இப்படிப்பட்ட மரண தண்டனை உண்டு என்றாலும் அது அபூர்வமாகத்தான் பின்பற்றப்படும். மாறாக அவமானப் படுத்தப்படும் தண்டனைகளே அதிகம் தரப்படும். உதாரணமாக, பெண்களின் தலைகளை

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

13.8.2012 திங்கட்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் பேருந்து நிலையத்தில், சட்ட ஒழுங்கை சீர்படுத்தக் கோரியும், மனித உரிமை ஆர்வலர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரியும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவண்ணாமலையில் சமூகநல ஆர்வலர் ராஜ்மோகன் படுகொலை, ஓசூரில் பெரியார் திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி படுகொலை, தேசிய மனித உரிமைகள் இயக்க மாநில செயலாளர் சங்கமித்ரனுக்கு வீச்சரிவாள் வெட்டு ஆகிய பிரச்சனைகளை சுட்டிக் காட்டி நடைபெற்ற இந்த கணடனப் பொதுக் கூட்டம், தேசிய நுகர்வோர் மற்றும் மக்கள் பாதுகாப்பு இயக்கம் சார்பாக, அதன் மாநில இணைச் செயலாளர் பா.ரவி தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.க. தலைமை கழகப் பேச்சாளர் மூ.விஜய ரத்தினம், வழக்கறிஞர் சங்கமித்ரன் மற்றும் பல மனித உரிமை ஆர்வலர்கள் கணடன உரையாற்றினர்.

15.8.2012 புதன்கிழமை அன்று மாலை 4 மணிக்கு, ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் மருத்துவர் லாவண்யா - வழக்குரைஞர் கலையரசு ஆகியோரது சாதி மறுப்பு சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. இந்த வாழ்க்கை இணை நல ஒப்பந்தத்தை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். திரைப்பட இயக்குநர் மணிவண்ணன், எழுத்தாளர் பாமரன், வழக்கறிஞர் ப.பா.மோகன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரையாற்றினர்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டம் ஓராண்டுகளாக நடைபெற்று வருகிறது. 367-வது நாளான 16.8.2012 வியாழக்கிழமை அன்று இடிந்த கரையில் அணு உலைக்கு எதிரான மாநாடு நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ., திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பல இயக்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## சுயமரியாதை இஞ்சினைப் பலப்படுத்தி...

சுயமரியாதை என்கின்ற ஒரு இஞ்சினைப் பலப்படுத்தி, சரியாக ஓடத்தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால், பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டு வந்து அதோடு இணைத்துத் தோல் பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்னவிதமான இயந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி, எல்லா உணர்ச்சிகளையுமவிட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத் தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் இலட்சியம். ஒரு இயந்திரத்தைச் சுழற்றும்போது முதலில் சுற்றும் சிறு வேகம்போல், இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது; மற்றபடி பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மை சக்தியும் பெருமையும வெளியாகும்.

**பெரியார் - குடிஅரசு - 17.02.1929**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டையடித்தல் போன்றவை. சில நேரங்களில் குற்றவாளிகளின் தலைகளில் மண் வாளிவைக்கப்பட்டு பல மணி நேரம் சாதித் தலைவரின் முன்னால் நிறுத்தப்படுவர். சில நேரங்களில் கழுதை மீது உட்கார வைக்கப்பட்டு அதன் வாலோடு குற்றவாளியின் முகம் கட்டப் படும். சில நேரங்களில் முகத்தில் சாணியைப் பூசி விடுவார்கள். பூணூல் அணிய உரிமை உள்ள சாதியினர் என்றால் அவரின் பூணூலை அறுத்து விடுவார்கள். சில நேரங்களில் சாதிப் பிரஷ்டம் செய்வார்கள் அல்லது அவமானப்படுத்துதலைக் குறிக்கும் முத்திரை பதிப்பார்கள்.”

2. “அனைத்து வகை தண்டனைகளிலும் ஓர் இந்துவுக்கு மிக மோசமான தண்டனையாக இருப்பது சாதிப் பிரஷ்டமே... இந்த பரிதாபத்திற்குரிய பிறவி தனது சக ஜீவராசிகளுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ள முடியாது. இந்த உலகத்தைப் பொறுத்தவரை அவன் செத்தவனே. அவன் மனித சமுதாயத்திலேயே இல்லை. தனது சாதியை இழப்பதன் மூலம் ஓர் இந்து தனது நண்பர்களை, சொந்தங்களை, பல நேரங்களில் மனைவியையும், குழந்தையையும்கூட இழக்கின்றன். இவனின் துயரத்தில் பங்கு கொள்வதைவிட இவனை இழக்கவே அவர்கள் தயாராவார்கள். இவனோடு யாரும் உண்ண மாட்டார்கள். இவனுக்கு ஒரு சொட்டு தண்ணீர்கூடத் தர மாட்டார்கள். இவனின் பெண்களுக்கு திருமணம் நடக்காது. மகன்களுக்கு மணமகள்கள் கிடைக்க மாட்டார்கள். அவன்எங்கே போனாலும் சாதி கெட்டவன் என்று தூற்றப்படுவான். எந்த இடத்தில் செத்தானோ அங்கேயே அவனது பிணம் அழுகி நாற வேண்டியதுதான்.”

3. “தனது சொந்த சாதியை இழந்தவன் அதனினும் கீழ்ப்பட்ட சாதியாக மாறினால் அவனது துன்பம் குறைவாக இருக்கும். ஆனால் அதற்கு வழி இல்லை. சாதி கெட்ட “பிராமண”னுக்கு சூத்திரன் கூடப் பெண் தரமாட்டான். தனது சொந்த சாதியில் மீண்டும் சேர்ப்பிக்கப்படாவிட்டால் மிக இழிந்த சாதியாகிய பறையர்களுடன் அல்லது அவர்களுக்கு சமமானவர்களுடன் அவன் கலக்க வேண்டியதுதான்.”

தாங்கள் போட்ட வேலி தங்களுக்கே விலங்காகப் போய் அதிலிருந்து மீள முடியாமல் தமிழ்ச் சமுதாயம் தத்தளித்தக் கொண்டிருந்திருக்கிறது. பல நூறு ஆண்டுகளாக இந்த நிலை. அவனுக்கு மொழி, இனம் என்பதைவிட சாதியே சமூக அடையாளமாக இருந்திருக்கிறது. மந்தையாக வாழும் குணமுள்ளவன்தான் மனிதன். இங்கே அந்த மந்தை என்பது சாதி வட்டத்தைத் தாண்டவில்லை. சாதி எனும் கூண்டே தனது பாதுகாப்பு வளையம் என அவன் நினைத்திருந்தான். உண்மையில் அது முழுச் சமுதாயத்தையும் கிணற்றுத் தவளையாக ஆக்கியிருந்தது. அதிலும் கீழ் சாதிக்காரர்களை சுயமரியாதையற்றவர்களாக ஆக்கியிருந்தது.

# ‘தலித்’ தலைவர் ‘சுதந்திர’ கொடி ஏற்ற எதிர்ப்பு: கழகத்தினர் முறியடிப்பு

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டத்திற்குற்பட்ட நெடுமானூரிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

இந்தப் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் வரும் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தின்போதும் அந்தப் பள்ளி தலைமை ஆசிரியர் முன்னிலையில் ஊராட்சி மன்ற தலைவர் கொடியேற்றி வைப்பார். ஆனால், இந்த ஆண்டு நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் அது தனி ஊராட்சி என்பதால் தாழ்த்தப்பட்டவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எனவே சுதந்திர நாளன்று இந்து ஆதிக்கசாதியினர் ஒன்று கூடி தற்பொழுது தாழ்த்தப்பட்டவர் தலைவர் என்பதால் தலைமை ஆசிரியரே கொடியேற்றட்டும் என்று கூறினர்.

இந்த செய்தியறிந்த நெடுமானூரைச் சார்ந்த கழகத் தோழர் இளையராஜா தலைமையில் ஒன்று திரண்டு சுதந்திரக் கொடியை தலைமை ஆசிரியர் ஏற்றுவதில் எங்களுக்கு கவலையில்லை. ஆனால், இத்தனை ஆண்டுகள் உயர்சாதி தலைவர் என்பதால் அவரே கொடியேற்றி வந்தார். ஆனால் இந்த முறை தாழ்த்தப்பட்டவர் தலைவர் என்பதால் இந்த முறையை மாற்றுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது என்று கூறினார். மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த தலைவர் ராசேந்திரன் தான் கொடியேற்ற வேண்டும். இல்லையெனில் சுதந்திர நாளை எதிர்த்து கருப்புக் கொடி ஏற்றுவோம் என்றும் கூறினர். காவல் துறையினரிடமும தகவல் தரப்பட்டது. பலகட்ட பேச்சு வார்த்தைக்குப் பிறகு தலைவர் கொடியேற்றினார்.

## ஒழுக்கம் என்பது...

சுயமரியாதைக்காரர்களாகிய நாமும் தனிப்பட்ட எந்த வகுப்பாருடையவும், சுயநலத்துக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும், தனிப்பட்ட மதவாதிகளுக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும் ஒப்புக் கொள்ளாமல் எல்லா மக்களுக்கும் எந்த வகுப்பாரானாலும், எந்த நிலையிலுள்ளவர்களானாலும், எந்த மதக்காரரானாலும் யாவருக்கும் ஒன்றுபோல் பயன்படும்படியான காரியங்களையே நாம் ஒழுக்கம் என்கிறோம். இதனால் சுயநலத்தையே பிரதானமாய்க் கருதிக் கற்பித்துக் கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை என்பது விளங்கும்.

தாசிக்கு ஒழுக்கம் ஒரு புருஷனையே நம்பி ஒருவனிடத்திலேயே காதலாய் இருக்கக் கூடாது என்பதாகும்.

குல ஸ்திரீ என்பவளுக்கு ஒழுக்கம் அயோக்கியனானாலும், குஷ்டரோகியானாலும் அவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தில் கூட சிந்திக்கக்கூடாது என்பதாகும்.

இதுபோலவே, முதலாளிக்கு ஒழுக்கம் எப்படி வேண்டுமானாலும் யாரையும் ஏமாற்றலாம் என்பதாகும்.

தொழிலாளிக்கு ஒழுக்கம் ஒரு விநாடி நேரம்கூட வேலை செய்யாமல், முதலாளிக்குத் துரோகம் செய்யலாகாது என்பதாகும்.

இந்துவுக்கு ஒழுக்கம் - பசுவை இரட்சிக்க வேண்டும் என்பதாகும்.

முஸ்லீமுக்கு ஒழுக்கம் - பசுவைப் புசிக்கலாம் என்பதாகும். இந்து வட்டி வாங்கலாம். முஸ்லீம் வட்டி வாங்கக் கூடாது என்பவை ஒழுக்கம்.

சைவனுக்கு ஒழுக்கம் - விபூதி பூச வேண்டும் என்பதாகும்.

வைணவனுக்கு ஒழுக்கம் - நாமம் போட வேண்டும் என்பதாகும்.

மாத்துவனுக்கு ஒழுக்கம் - முத்திரை அடித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

இந்துவுக்கு அக்காள் மகளை, அத்தை மகளைக் கட்டிக் கொள்வதும்; சிற்றப்பன் மகள் தங்கை என்பதும் ஒழுக்கம்.

முஸ்லிம் - சிற்றப்பன் மகளைக் கட்டிக் கொள்வது ஒழுக்கம்; அக்காள் மகளைக் கட்டக் கூடாது என்பது ஒழுக்கம்.

ஆகவே, இன்று உள்ள ஒழுக்கங்கள் என்பவைகள் எல்லாம் சட்டம்போல் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பொருந்தியவைகளே தவிர, எல்லோருக்கும் பொருந்தியவைகள் அல்ல.

**பெரியார், குடிஅரசு - 24.11.1940**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th August 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.